உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி உங.] குரோதன௵ ஆவணிமீ [பகுதி ௧௦.
Vol. XXIII. August-September-1925. No. 10.

## கஜவிதிநூல்.

### முன்னுரை.

[இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பாண்டியன்புத்தகசாலையில், கஜவிதிநூல் என்ற பெயருடன் அபூர்த்தியான ஓரோலையேட்டுச்சுவடியுள்ளது. அதில் யானைகட்குவரும் நோயின் விவரமும், அதை நீக்கும் முறையும் சித்தர் வைத்தியநூல்களிற் காணப்படுவனபோன்ற செய்யுட்களாற் கூறப்படுகின்றன. இதை யியற்றியவர் பாலகரிஷி என்று தெரிகிறது. இது, யானையுடையார்க்கு மிகவும் பயன்படத்தக்கதாயிருப்பதால், பாட்டிலுள்ள விடயங்களைவிடாது வசனமாகஎழுதி வெளியிடப்பெற்றிருக்கிறது. இங்குள்ள ஏட்டுச்சுவடியில் ஐம்பத்தைந்து பாடல்களே இருப்பதால் முற்றும் வெளியிட முடியவில்லை. பூரணமான பிரதியுடையவர்கள் கொடுத்துதவினால் முழுதும் வெளியிடுதற்கு அநுகூலமாயிருக்கும். சே. ரா. சு.]

### நூல்.

ஒருவயது சென்ற யானைக்குக் கழுகாளிப்பேய் என்னும் நோய்வந்தால் அதன் குணமாவது:—

நாற்காலும் விலகிநிற்கும், வாயினின்று நீர்வீழும், உடல்வெதும்பும், கண்சிவந்திருக்கும், தலை நேரிட்டிருக்கும், அதிர்சத்தம் உண்டாகும்,

இதற்குச் சாந்தி:—நிறைமரக்கால்வைத்து, தேங்காய், பழம், தாம்பூலம், சந்தனம், சாம்பிராணி, கடலை, வடை, தோசை, அப்பம், அவல், பயறு, தேங்குழல், எள்ளுருண்டை, பாயசம், பாசிப்பருப்புப்பொங்கல், சர்க்கரைப்பொங்கல் இவையெல்லாம் சேகரித்துவைத்துக்கொண்டு, வாழையிலைமேல் நெற்பரப்பி, அதன்மேல் இலைவிரித்துப் பச்சரிசிபரப்பி, அதன்மேல் ஜலம்பூரித்து மாங்குழையும் தேங்காயும் வைத்த கும்பத்தை ஸ்தாபித்துச் சந்தனமும் மாலையும் சாத்தித் தூபதீபங்கொடுத்து, ஆல், அரசு, புரசு, அத்தி, வன்னி இவைகளின் சமித்திட்டு, சரவணபவ என்னும் ஆறெழுத்தால் நெய்கொண்டு நூற்றெட்டுத்தரம் ஹோமஞ்செய்து பூசித்துப் பின்பு, பத்துக் கோழிமுட்டைபடைத்துத் தூபதீபங்காட்டி ஒரு வெள்ளித்தகட்டில் அறுகோணங்கீறி அவ் வறுகோணத்திலும் முன்சொன்ன சடாக்ஷரத்தையும், அவ்வறுகோணமத்தியில் ஸிரி: என்னு மக்ஷரத்தையும் வரைந்து, தூபதீபங்காட்டி, ஊஂ, ரூஂ, ஸிஂ என்று முப்பத்தெட்டுருச் செபித்து அவ்வெள்ளித்தகட்டை யானைக்கழுத்திற் கட்டவேண்டும்; சேவலும் கடாவும் பலிகொடுக்க வேண்டும்.

இதற்குக் கவளம்:—மாற்கிழங்கு, புளிநாலைக்கிழங்கு, பெருங்காயம் (இம்மூன்றும் வகைக்கு மூன்றுவராகனெடை); நொச்சி, தழுதாழை, வேலிப்பருத்தி, கண்டங்கத்திரி சமூலம் இவற்றைப் பேய்க்கொமட்டியிலைச்சாறுவிட்டரைத்துக் கவளமாக்கிக் கொடுக்கத் தீரும்.

இதற்கு மற்றொருமருந்து:—பாகலிலை, தழுதாழை, நொச்சி, ஊமத்தை, எருக்கு இவைகளின் இலைச்சாறு வகைக்கு ஒருபடிஎடுத்து அதில் ஒருபலம் பழம்புளியும் ஒருபலம் விளாம்பிசினும்போட்டுக் காய்ச்சிக் கலயத்தில் வைத்துக்கொண்டு ஆனையின்மூக்கிலும் காதிலும் விட்டடைத்து ஆனையை நிழலிற் கட்டவேண்டும்; மூன்றுநாள் இப்படிச் செய்துவரத் தீரும். யானை வெகுகுணமாயிருக்கும்; சாதுவாகும்.

இரண்டுவயதான யானைக்கு நிணமுண்ணும்பேய் என்னும் நோய் வந்தால் அதன்குணமாவது:—

தொண்டைகட்டி வீங்கிக்கொள்ளும்; கண்ணிலிருந்து ஜலம்பெருகும்; இரைதின்னாது; நிலத்தில்வீழும்; நீரிலேகிடப்பதுபோல்

மனங்கொள்ளும்; கஸ்தூரிமஞ்சள்போலச் செவியிரண்டும் பழுப்பாகத் தோன்றும்.

இதற்குச் சாந்தி:—மஞ்சளால் விநாயகமூர்த்தம் அமைத்துச் சந்தனம், அறுகு, கொன்றை முதலியவற்றாற் பூசித்து, தேங்காய், வாழைப்பழம், விளாம்பழம், பலபயற்றுச்சுண்டல், தோசை, பணிகாரம், முதலியவற்றைப் படைத்து நிவேதித்துத் தூபதீபங்கொடுத்துப் பின்பு வடக்குமுகமாயிருந்து வெள்ளித்தகட்டில திரிகோணங்கீறி அத் திரிகோணத்தில் நசி, மசி என்ற அக்ஷரங்களை எழுதி, மஞ்சள்பூசி, ஷை மந்திரத்தை மூன்றுருச்செபித்துப பூசித்து அத்தகட்டை யானைக் கழுத்திறகட்டவேண்டும்; வெள்ளைச்சேவலும செஞ்சேவலும் பலி கொடுக்கவேண்டும்.

இதற்குக் கவளம்:—வாய்விளங்கம், அரத்தை, கறிமஞ்சள், அக்கிராகாரம், சிறுவிழுதியிலை, நொச்சியிலை, புளிநரலைக்கிழங்கு, இவற்றில் வகைக்கு ஒருபலம் எடுத்து மூங்கிலிலைச்சாறுவிட்டிடித்துத் திரட்டி விளாங்காயளவு மூன்றுபோது கவளமாகக்கொடுக்கத் தீரும்.

வீக்கங்கண்டால் *வித்துத்தண்ணீரிலையின்சாறும், எலுமிச்சம் பழச்சாறும் சமமாகக்கூட்டிப் பதமாகக் காய்ச்சியெடுத்து வீக்கத்தில் தடவி, வெந்நீர்குடிக்கச்செய்து நெற்பயிரும மூங்கில் இலையும் இரையாகக் கொடுக்கத் தீரும்.

மூன்றுவயதான யானைக்குத் தேகத்தில் வயிரவன்பேய் என்னும் நோய்வந்தால் அதன்குணமாவது:—

நான்குகாலும் விலங்கிட்டாற்போல் பதறும். வாயினின்று நீர் விழும்; இரைதின்னாது.

இதற்குச் சாந்தி:—தரைமெழுகி விளக்கிட்டு மஞ்சளால் விநாயகமூர்த்தியைஎழுந்தருளப்பண்ணி, முறகூறியபடி மூன்றுகும்பம்வைத்து விநாயகர்க்குச் சந்தனமும் புஷ்பமும் சாத்திப் பழம் தேங்காய்முதலியவற்றை நிவேதித்துத் தூபதீபம் கொடுத்துக் கும்பத்துக்குமுனதானிருந்து விநாயகரைத் தோத்திரம்செய்து, தாம்பிரத்தகட்டில் ஆறுகோணங்கீறி, அவ்வறுகோணத்தின்மேற் சூலமிட்டு, நடுஅறையில் 'ஓம்

*வித்துத்தண்ணீரிலை என்பது விளங்கவில்லை.

நமசிவாய' என்று வரைந்து கும்பத்திலிட்டுப் பூசித்து அத்தகட்டை யானைக்கழுத்திற் கட்டவேண்டும்.

இதற்குக் கவளம்:—நாய்க்கட்டஞ்சுட்டசாம்பலை எருக்கம்பூக் கூட்டி அவித்து அதனை வைக்கோலினுள்வைத்துச் சுருட்டி எடுத்துக் கவளங்கொடுத்து, வெந்நீர் குடிக்கச்செய்யவேண்டும். யானைக்கு இருபுறமும் கணப்புவைக்கவேண்டும்.

நான்குவயதுள்ள யானைக்குப் பத்திரிப்பேய் என்னும் நோய்வந்தால் அதன்குணமாவது:—

காதும் முகமும் கோசமும் வீங்கும். ஓட நடக்கமாட்டாது. இரை தின்னாது.

இதற்குச் சாந்தி:—மூன்றுகழஞ்சு காரீயத்தினாற்செய்யப்பட்ட தகட்டில் முக்கோணம் வரைந்து, நடுவே 'நமசிவய'என்ற மந்திரமெழுதி, துர்க்காதேவிநாமத்தை நான்குருச்செபித்துத் தகட்டுக்குச் சோடசோபசாரமுஞ்செய்து வாழ்த்தித் தகட்டை யானைக்கழுத்திற்கட்டி ஆலாத்தியெடுக்கவேண்டும்.

இதற்குக் கவளம்:—வெள்ளுள்ளி, ஈருள்ளி, திப்பிலி, வசம்பு, கஸ்தூரிமஞ்சள், அரத்தை, மிளகு, பெருங்காயம் இவை வகைக்கு ஒருபலம் நிறுத்துச் சேர்த்திடித்துக் கவளமாக ஊட்டத் தீரும்.

இதற்குப் பூச்சு:—கரியபவளம், வெல்லம், சீனக்காரம், கொடுக்காய்ப்புளி, விளாம்பிசின், லவங்கம் இவை வகைக்குப் பலம் ஒன்று நிறுத்தெடுத்திடித்துத் தூள்செய்து, தழுதாழைச்சாறு, ஊமத்தஞ்சாறு, நொச்சிச்சாறு இவற்றில் அத்தூளைக்கலந்து புற்றுமண்ணுங் கூட்டிக் காய்ச்சி வீக்கத்திற்பூசத் தீரும்.

### கண்வீக்கத்துக்கு மேற்பூச்சு.

(1) எலுமிச்சம்பழத்தோட்டைக் கருகச்சுட்டு அந்தச்சாறுவிட்டரைத்துக் கண்ணிரண்டுக்குமேலே வளைந்து சுற்றி மூன்றுநாள் பூச வீக்கம்போம்.

(2) சுத்திசெய்த நேர்வாளம், குக்கில் இவை வகைக்குப் பலம் ஒன்று; கடுகு பலம் நான்கு; ஈருள்ளி பலம் நான்கு; அபின் பலம்

ஒன்று; கழற்சிப்பருப்பு பலம் ஐந்து; கருஞ்சீரகம் அரைப்பலம்; சவுக்காரம் இரண்டுபலம்; நாவி பலம் அரை; அமுக்கிராவேர் பலம் இரண்டு; எட்டிவிதை ஒருபலம்; கொடுவேலிவேர் பலம் இரண்டு; இவற்றை இடித்து, ஊமத்தையிலைச்சாறும் எருக்கிலைச்சாறும்விட்டரைத்துக் கோழிமுட்டை வெள்ளைக்கருவும்சேர்த்துக் கொதிக்கவைத்து நாள் ஒன்றுக்கு அந்தி சந்தி இரண்டுபொழுதாக மூன்றரைநாள் ஏழுபொழுது பூசத் தீரும்.

கண் சிவந்து கடுத்துக் கூசி நீர்வடிந்தால் அதற்குப் பூச்சு:—புளியிலை, துளசியிலை இவை வகைக்குப் பலம் இரண்டு; விதைநீக்கிய கடுக்காய் பலம் இரண்டு; இவற்றை நீர்விட்டரைத்துக் காய்ச்சிக் கண்ணைச் சுற்றிப்பூசத் தீரும்.

## தோணிவீக்கத்துக்குப் பூச்சு.

(1) இரண்டு விலாப்பக்கமும் வீக்கங்கண்டால் அபின், எட்டிவிதை, பனைவெல்லம், காசுக்கட்டி, கடுக்காய், தான்றிக்காய், களிப்பாக்கு, பெருங்காயம் இவற்றைப் புளியைக் கரைத்துவிட்டரைத்துக் கொதிக்க. வைத்துப்பூசத் தீரும்.

(2) காசுக்கட்டி, களிப்பாக்கு, காவிமண், பெருங்காயம், அபின், சமுத்திராப்பழம் இவற்றைக் கருக்கியெடுத்தகேப்பையுடன் எலுமிச்சம்பழச்சாறுவிட்டரைத்து, திருகுகள்ளியைவாட்டிப்பிழிந்த சாறெடுத்துவிட்டு மத்தித்து மூன்றுதரம் பற்றுப்போடத் தீரும்.

(3) கொடுக்காய்ப்புளி, ஓமம், கம்பிப்பிசின், வாய்விளங்கம் இந்த நான்கையும் தழுதாழை, நொச்சி, ஊமத்தை என்பவற்றின் சாறுவிட்டுப் புற்றுமண்ணுங் கூட்டி யரைத்துக் காய்ச்சி வைக்கோற்சுருளாற் றேய்த்து மேலெல்லாஞ் சுடச்சுட அடித்து வெந்நீரைக்குடிக்கச்செய்ய வீக்கந்தீரும்.

தோண்வீக்கம் பின்னும்வந்தால் அதற்குப் பூச்சு:—வசம்பு, மஞ்சள், கஸ்தூரிமஞ்சள், அமுக்கிராவேர், இசங்கம்வேர், எருக்கம்வேர், ஊமத்தைவேர், கழற்சிப்பருப்பு, தெல்லுப்பருப்பு, குன்றிமூத்து, சுண்ணும்பு, முருங்கப்பட்டை, எட்டிவிதை இவை வகைக்குப்பலம் ஐந்து;

சிற்றகத்திவேர், அவுரிவேர், உவர்மண் இவை வகைக்குப் பலம் பதினைந்து; பெருந்தும்பை பலம் பத்து; இவற்றைச் சிறுநீர்விட்டரைத்துக் கொதிக்கவைத்து முதலில் இசங்கங்குழையாற் றேய்த்தடித்துத் துவாலைபோட்டுப் பின்பு எருக்கிலையாற் றேய்த்தடித்து அதன்மேல் இம்மருந்தைப் பூசத் தீரும்.

இதற்குக் கவளம்.

(1) ஒருசாணகலம் ஒருசாண்நீளமுள்ள இலுப்பைப்பட்டையையெடுத்து அதற்குள் ஒருபலம் சித்திரமூலத்தைவைத்து மடித்துப் புல்லாலே கவளமாகக் கட்டிவைத்துப் புகைபடாதபடி தீயிலேவாட்டிக் கரிந்துபோகாமல் எடுத்துவைத் தாறவிட்டு மூன்று பங்குவைத்து மூன்றுநாள் சாயுங்காலம் உள்ளுக்குக் கொடுத்து, யானையை அம்மூன்றுநாளும் காலையிற் குளிப்பாட்டி மேற்சொன்ன பூச்சுவகையில் ஏதேனும் ஒன்றைப் பூசிவரத் தீரும்.

(2) புளிநாலைக்கிழங்கு, ஈச்சம்பாளை, வெருகங்கிழங்கு இவற்றை ஒருபல வெங்காயத்துடன் ஆறுமாதக்காடிவிட்டரைத்துக் கவளமாகத் திரட்டிக்கொடுத்துவரத் தீரும்.

(3) திப்பிலி, தேசாபுரம், கடுகுரோகிணி, வெள்ளுள்ளி, குக்கில் இவை வகைக்குப் பலம் இரண்டு; மிளகு பலம் நான்கு; வாய்விளங்கம் பலம் ஒன்று; திப்பிலிமூலம் பலம் மூன்று; கருஞ்சீரகம் பலம் மூன்று; பெருங்காயம் பலம் கால் இவற்றைப் பொடிசெய்து சாராயம் விட்டுக் கிண்டி அந்தி சந்திகளில் விளாங்காயளவு கொடுத்துவரத் தீரும்.

வால்வீக்கங்கண்டால் அதற்கு மருந்து:—சுத்திசெய்த நேர்வாளம் கழஞ்சு இரண்டு, கொழுஞ்சி, நொச்சி, மிளகு, ஓமம் இவை வகைக்குப் பலம் அரை; இவற்றை அரைத்துக் கவளம்போலத் திரட்டிக்கொடுத்தும், வேப்பெண்ணெயைச் சுடவைத்து வாலில் பூசியும்வரத் தீரும்.

முன்னங்கால் பின்னங்கால் வீங்கியிருந்தால் அதற்குக் கவளம்:—கண்டங்கத்திரிசமூலம் இரண்டுபலம் இடித்து வறுத்துச் சாராயம்விட்டுப் பிசைந்து தேங்காயளவு கவளம் கொடுக்கத் தீரும்.

இதற்கு ஒத்தணம்:—பெருங்காயம், வெள்வெங்காயம், எட்டிக்காய், குரோசாணியோமம், நாரத்தம்பழம், புளியம்பழம், கல்லுப்பு, நொச்சியிலை, எருக்கிலை, ஊமத்தையிலை, புற்றுமண் வேப்பமுத்து, நாய்செத்த இடத்துமண், எலுமிச்சம்பழம் இவற்றை வேப்பெண்ணெய்விட்டு

வதக்கி ஒத்தணமிடத் தீரும். இந்த வேப்பெண்ணெயைப் பூச மற்று முள்ள எவ்விதவீக்கமும் போம்.

சாறுபாத்து என்ற நோய்வந்தால் அதன் குணமாவது:-கொப்பூழ் வீங்கும்; தொண்டைகட்டும்.

## இதற்குக் கவளம்.

(1) நீர்த்தவளை மூன்று கொண்டுவந்து, காலும்குடலும்போக்கி அதன் வயிற்றினுள், * கருமருந்து, காட்டுச்சீரகம், கிராம்பு, மஞ்சள், சாதிபத் திரி இவற்றை வகைக்கு ஒருவராகனெடை நிறுத்தெடுத்துவைத்துப் பச்சைப்புல்லாற் பொதிந்துகட்டிச் சாம்பிராணித்தூபங்காட்டி வாட்டி ஒருபோது கொடுக்கத் தீரும்.

2) தவளையைக் காலும் குடலும்போக்கி, அதன் வயிற்றினுள், சாதிக்காய், சாதிபத்திரி, கருஞ்சீரகம், கிராம்பு இவற்றை வகைக்கு ஒரு வராகனெடை வைத்து நெருப்பில்வாட்டி உள்ளுக்குக்கொடுத்து, மறுநாள் மூக்கறைச்சாரணைவேரை யரைத்தூட்டத் தீரும்.

(3) ஊமத்தையிலைச்சாற்றிற் சுண்ணும்பைக் குழப்பிப்பூசி, பின்பு காஞ்சிரைவிதையைக் கருகவறுத்து, வெள்ளுள்ளி, மிளகு, வெந்தயம், கடுகு இவற்றையும் வறுத்துச்சேர்த்திடித்து ஆட்டிரத்தம்விட்டு உருண்டைசெய்து தினமும் உள்ளுக்குக்கொடுக்க வீக்கந் தீரும். இந்த உருண்டையை எலுமிச்சம்பழச்சாற்றிற்குழப்பிக் கனமாக மேற்பூச்சும் பூசலாம்.

(4) கருத்தசங்கம்வேரை வேகவைத்து இறுத்த தண்ணீரில் அரிசியை நனைத்து உள்ளுக்குக்கொடுக்கத் தீரும்.

## கொப்பூழ்வீக்கத்துக்குப் பூச்சு :—

(1) வெடிமருந்தைச் சாராயம்விட்டரைத்துப்பூசிச் சாம்பிராணிப் புகைகாட்டத் தீரும்.

(2) கரியபவளம், கஸ்தூரிமஞ்சள், அபின், கடுகு, ஈருள்ளி, நாவி, சவுக்காரம், அமுக்கிராவேர், கழற்சிப்பருப்பு, கருஞ்சீரகம், கொடு வேலிவேர், எட்டிவிதை, கோழிமுட்டை, எருக்கிலை, ஊமத்தையிலை இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துக் கொதிக்கவைத்துப் பூசப் போம்.

---

*கருமருந்து இதுவென்று விளங்கவில்லை.

(3) அமுக்கிராவேர், சாம்பிராணி இவற்றைச் சிறுநீர்விட்டரைத்துக் கிண்டிக் கொதிக்கவைத்துப்பூசிக் காட்டெருவின்புகை காட்டத் தீரும்.

சாறுபாத்துக்குக் கருநாவிமாத்திரை:—சாதிலிங்கம், அன்னபேதி சவ்வீரம், மனோசிலை, தாளகம், மதனகாமப்பூ, கெந்தி, கொடுவேலி, இந்துப்பு, பெருங்காயம், பொரிகாரம், ரசகற்பூரம், ரசசெந்தூரம் இவை வகைக்குக் கழஞ்சு ஒன்று; கருநாவி அரைக்கழஞ்சு இவற்றைச் சுத்தி செய்து சாராயமவிட்டு, கோதுமைமா, உளுந்தமா இவை வகைக்கு அரைக்கால்படி வீதம சேர்த்து அரைத்துச் சுண்டைக்காயளவாக உருண்டையாகச்செய்து, புதுச்சட்டியில்வைத்து நிழலிலே உலர்த்திச் சாயுங்காலம் ஆனைக்குத் தண்ணீருட்டி, அரிசிதினறவுடன், ஷை உருண்டையில் இரண்டை எருக்கம்பாலில் ஊறவைத்து உள்ளுக்குக் கொடுக்கத் தீரும்.

வாய்நீர்வீழ்ந்தால் அதற்கு மருந்து.

(1) இரண்டு எலுமிச்சம்பழத்தில் நீற்றாத சுண்ணாம்புக்கல்லைப் பொடிசெய்துவைத்து உள்ளுக்குக்கொடுக்கத் தீரும்.

(2) ஒரு எலுமிச்சம்பழத்தளவு சங்குத்தூளை எலுமிச்சம்பழத்துள்வைத்து உள்ளுக்குக்கொடுக்கத் தீரும்.

(3) பொரித்தபொரிகாரம் நான்குகழஞ்சு, பெருங்காயம் நான்கு கழஞ்சு, சுக்கு நான்குபலம், அபின் நான்குகழஞ்ச; இவற்றை முருங்கைப்பட்டைச்சாறுவிட்டரைத்துக்கொடுக்கத் தீரும்

இதற்கு மேற்பூச்சு:—வண்ணான்கற்கீழ்க்கிடந்தசேற்றைக் கொதிக்கவைத்துமேலே அடிக்கவேண்டும் அடித்தவுடன் சட்டியிலே அக்கினியை வாரிவைத்து நான்குகாலுக்கும் வெப்புக்காட்டவேண்டும்.

கொடுவேலிவேர் பலம் கால், இலுப்பைப்பட்டை ஒருபலம் இவற்றை இடித்துச் சிறுநீரில் நன்றாகநனைத்து அதனை வைக்கோலிற் கவளமாகக்கட்டி, எட்டுநாளைக்கு ஒருமுறை உள்ளுக்குக்கொடுத்துவாதத் தொப்புள்வலி, தொண்டைக்கட்டு, தோணிவீக்கம், வாய்வுக்குன்மம், அசாத்தியம் ஆகிய பலநோயும் நீங்கும்.

[இங்குள்ள ஏட்டில் இதற்குமேற் பாடல்களில்லை.]

இங்ஙனம்,

திருவாவடுதுறையாதீனவித்துவானும்,

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமாகிய

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

# மேல்புலக் கல்விமுறைகள்.

## II. மாண்டிஸோரி முறை.

[உக-ம் தொகுதியின் உகூஉ-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

### VII. உளவலி (WILL).

ஒருகுழந்தை தான் காணும் பலபொருள்களில் ஒன்றை யெடுக்குமாயினும், மற்றொருகுழந்தை கையில்வைத்திருப்பதைக் கீழேவைக்கும்வரை காத்திருக்குமாயினும், அதனை அழைக்குங்கால், அது தன்கையில் வைத்துக்கொண்டிருக்கும்பொருளை வெகுபத்திரமாகவைக்குமாயினும், தான்வைத்திருக்கும்பொருளைக் காணும் மற்றொருகுழந்தை அதனை யடையவிரும்பினால் அப்பண்டத்தை அதனிடம் கொடுக்குமாயினும் அக்குழந்தையை உளவலியுடையதெனலாம். இப்படிப் பற்றுடைய செய்கைக்கு உளவலியென்று பெயர். இக்குழந்தை சிறிதுபொழுது கழித்து மறுபடியும் அதேபண்டத்தையெடுத்து முன்போலவே செய்யுமாயின் அதனை இடையறாவிருப்பமுடையது என்னலாம். இவ்விருப்பத்தின்பலன் என்னவென ஆராய்வோம். வெளித்தோற்றத்தில் உளவலி யென்பது விருப்பநிகழ்ச்சி (Movement) ஆகும் கோபம்வருங்காலத்து அதனை அடக்குதலும், பிறரிடத்திற் காணப்படும் பொருள்களைத் தான் அடையவிரும்பினும், அவ்விருப்பத்தை மேலோங்கவிடாமற் றடுத்து அடக்கியாளுதலும், இவைபோன்ற மற்றும் பலசெய்கைகளும் இதனுள் அடங்கும். இதற்கு அறிவுக்கலப்பும் வேண்டியிருப்பதால் உளவலியென்பது தனிப்பட்டதாயிராது அறிவுடன் கூடியதாயிருக்கும்.

ஒன்றைச்செய்யநினைத்தவன் அதனைப் பூர்த்திசெய்யாவிடில் அவன் உளவலியுடையவனாகான். ஒன்றைச்செய்யநினைப்பதும் விரும்புவதும் முற்றுப்பெற்றதாகாது. அதன்காரியப்பாடே நிறைவெனல்வேண்டும். எண்ணம் உதிப்பது செய்கைக்கு முதற்காரணமாகும். நமது செய்கைகளெல்லாம் முயற்சியையும் அதனாலுண்டாகும் பிரயோசனம் அல்லது

முட்டுப்பாடு இவைகளையும் காட்டும். நாளடைவில் அவை பழக்கமென மாறுகிறது. இதுவே முடிவில் ஒருவனை நன்றாகப் பழக்கப்பட்டவன், தேர்ந்தபழக்கமுடையவன் என்று குறிக்க ஏதுவாகிறது. காரியத்தடை முட்டுப்பாடு முதலானவை ஒருகாரியத்தில் ஏற்படாதவரை நாம் அக்காரியத்தைச் செவ்வனே செய்யக் கற்றுக்கொள்ளமாட்டோம் ஆகையாற்றடையும் நற்குணத்தைப் பழக்கும்; ஆயினும், இவைகளால் மனஞ்சலியாது காரியசித்தியடையும் வயதுமுதிர்ந்தவர்களையே முழுதுமுணர்ந்தமனிதர் (PERFECT MEN) என்று கூறுவர்.

சிறுவர்களிடத்திலென்றாலோ இக்குணங்கள் இனிமேற்றான் உண்டாகவேண்டும் சிறுவயதிலேயே அவர்கள்செய்கைகளை இயற்கைக்கு விரோதமாகக் காண்போமாயின் அவர்களைப் பிஞ்சிற்பழுத்தவர்களென்று வசைகூறுகிறோம். அவ்வசைக் கிலக்காகாதபடி அவர்களுடைய அறிவு நல்வழியிற்செல்லுமாறு செய்யவேண்டும் அவர்கள் நிலையற்றதும் நிரம்பாததுமான சித்தமுடையவர்களாவர். அவர்கட்கு இனப்படுத்துமுறை(Combination), தகுதிமுறை (Adaptation) என்ற இரண்டும் அறிவின்கண் சேரவில்லை. இவைகளைச் செம்மை செய்து வளர்ப்பது நமது முதற்கடமையாகும் குழந்தைகள் பிறர் செய்யும் ஒரு செயலையோ அல்லது பிறர்வைத்திருக்கும் ஒரு பொருளையோ பார்க்கும்போது தாமும் அச்செயலைச் செய்யவோ அல்லது அப்பொருளைப் பெறவோ நினைத்தால் அது உற்சாகம் எனப்படும். பெரியோர் செய்யும் வேலையை அவர் செய்துமுடிக்கும்வரை சிறுவர்கள் காத்திருந்து பார்க்கக் காண்கிறோம். அதனாற் சிறுவர்க்கு உண்டாகும் விருப்பம் உற்சாகம் இரண்டிற்கும் ஒருதடை ஏற்படுகிறது. அத்தடையினால், சிறுவர்களின்மனத்தில் ஒரு கட்டுப்பாடு உதிக்கிறது. அதற்கு மேற்றான் அவர் விருப்பநிறைவு நேர்மையை யடையும், இது தானாக உண்டாவதேயாம். இன்னவழிச்செல்லவேண்டும்; இவ்வாறு நடக்கவேண்டும் என்று திட்டப்படுத்துவதால் ஒருவனுக்கு எப்படி நன்னடக்கை படியமாட்டாதோ அப்படியே விருப்பமும் இந்த இந்த விதமாகப் பூர்த்தியாகவேண்டுமென்றால் நிறைவுறாது. [கட்டிக்கொடுத்த சோறும் சொல்லிக்கொடுத்தவார்த்தையும் வெகுநாளைக்கு நில்லா என்பது ஒரு பழமொழி.] கல்வியில் ஒருவனது தோற்றம் எவ்வெவ்வழிகளிற் செல்லுமோ அவ்வவ்வழிகளிலெல்லாம் சென்று அதனை

வளர்த்தாற்றான் அது பலம்படும். மெய்வளர்ச்சிக்குச் சரீராப்பியாசம் வேண்டுமாறுபோல மனவளர்ச்சிக்கும் அதற்குற்ற அப்பியாசங்கள் வேண்டும். மெய்ப்பயிற்சியின்றி மூலையிற்கிடப்பவன் நாளடைவில் நடக்கக்கூட இயலாது நோயாளியாகிவிடுவதுபோலவே உளவலிகுன்றிய வன் யாதொன்றும் செய்ய இயலாதவனாவன். இவ்வுளப்பயிற்சிக்குச் சிறந்தகால்களாயிருப்பவை உற்சாகமும் ஐயுறவும் ஆம். உற்சாகம், சிலசமயங்களில், தவறும் கொடுமையும் ஆபத்தும் ஆன வழிகளிற் கொண்டுபோய்விடும் என்பது உண்மையே; ஆயினும், அது அவ்வுற்சாக முடையான் ஒருவனுக்கே தீமையை அல்லது துன்பத்தைத் தரும்; அன்றி, அதனால் பிறர்க்குத் துன்பமுதலியவை இல்லை. ஐயுறவோ வெகுகொடியது; நல்லதருணத்தில் ஒரு முயற்சியையும் செய்யவிடாம லும், ஒருமுடிவுக்கும் வராமுடியாமலும் செய்து ஐயுறவுடையானைக் கெடுப்பதுமன்றிப் பிறரையும் கேட்டுக்குள்ளாக்கிவிடும். ஒருவன் பெயரும் கீர்த்தியும்பெற்று முன்வரவேண்டியசமயத்தில், பின்னின்றும் உள்ளமுந்தியும் இருந்த இடம் தெரியாமற்போகும்படியும் செய்துவிடும். ஆகையால் உளவலியைச் செம்மைசெய்தற்கு உற்சாகத்தையும் ஐயத்தையும் சமன்செய்து, கூடுமானவரை சிறுவர்களைத் தாராள நோக்கத்திற் பழக்குவித்து அவற்றைச் சரியானபடி உண்டாக்கவேண்டு மாதலால் இவைகள் விருப்பந்தோன்றும் இளமைப்பருவத்திலேயே செம்மைசெய்யப்படவேண்டும்.

ஆயினும், அறிவின்றன்மையிற் சமநிலைஉண்டாகிவிட்டதனாலேயே ஒருவன் மனவலியுடையனாவனெனல் தவறாகும். அறிவு எப்போதும் மற்றைப்பொருள்களையும் கவனிக்கத் தயாராகவிருக்கிறது. நற்குண நற்செய்கைகள்வாய்ந்த ஒருவர் மனவலியற்றவராக இருக்கலாம். தீய குணங்களையுடைய ஒருவர் உளவலிநிறைந்தவராக இருக்கலாம். மக்கட் டொகுதியானது, ஒருவர்க்கொருவர் உதவிவேண்டுவதாயும் தனித்து வாழ இயலாததாயும் இருக்கிறது. உதவிசெய்தலாவது ஒருமனப் பட்டுக் காரியங்களைச்செய்தலாகும். ஒருமைப்பாட்டோடுநடத்தல் விடா முயற்சியாலும் பிடிவாதத்தாலும் ஏற்படுகிறது. விடாமுயற்சியினாற் பலவேலைகள் முடிகின்றனவென்பது கண்கூடாம். விடாமுயற்சிக்குப் பிடிவாதம் அநுகுணமானது. முயற்சியுண்டாகியபின்பல்லவா விடா முயற்சிவேண்டப்படுவது. முயற்சியில்லையாயிற் கேடு வரும். தீயவினை

யுடையானொருவன் அத்தீவினையிற்புகக் காரணம் என்ன என ஆராய்வோமாயின், அவன் அத்தீவினையிற் புகுமுன் யாதொரு செயலுமின்றி மடியனாயிருந்திருக்கவேண்டும் என்பது விளங்கும். சோம்பர் என்னும் நோய் எப்பொழுது உண்டாகிறதென்று பாருங்கள்! நல்லோனுங்கூடத் தான் நோயின்வாய்ப்படுமுன்னர் ஒருவினையும் செய்யமுடியாது தளர்வுற்று உறங்கக் காண்கிறோம். எந்தக்குழந்தை இளமையிலேயே ஒருவினையில் விடாமுயற்சிகொள்ளுகிறதோ அக்குழந்தை வளர்ந்து ஆண்மகனாகுங்காலத்து நன்னடையுடையதும் ஜனசமூகத்துக்கு நன்மை செய்வதும் ஆகும். ஒரு குழந்தையை அதன் இச்சைப்படி பயில விடாது தடுத்து முன்னமே குறிக்கப்பட்டபடி ஒருபாடத்தைச் சிறிது நேரம் கற்கச்செய்து, பிறகு வேறொருபாடத்தைப் படிக்கும்படி எவன் செய்கிறானோ அவன் அக்குழந்தை முன்னேற்றமடையும்வழியைவிட்டு அது, தனக்குப் பலவிடயங்களும் தெரியுமென்று பெருமைப்பட்டுக் கொள்ளும்படிசெய்தவனாகிறான். நமக்குப் பிள்ளைகளின் கல்வி மாத்திரம முக்கியமானதன்று; அவர்களைச் சிறந்தமக்கள் என்று பலரும் சொல்லும்படி பயில்விப்பதே முக்கியநோக்கமாகும்.

இனி, உளவலிக்குப் பிடிவாதகுணமும் வேண்டும் என்று முன்னர்க் கூறினோம். ஆயினும், அது அத்துணைச் சிறப்புடையதன்று. உளவலியின் காரியப்பாடு ஒருவிடயத்தில் தீர்மானமுறுதல் அல்லது ஒரு முடிவுக்குவருதலாகும்; அதற்குப் பிடிவாதமிருக்குமாயின ஆராய்ந்து பார்க்க இடம் தராது. ஒருகாரியத்தைச்செய்து, அதனால் தன்னை அறிவுடையான் என்று பிறர்கூற, ஒருவன் முதலில் இதைச்செய்வதென்று தீர்மானிக்கவேண்டும். தீர்மானமென்பதற்கு அடிப்படையாக இருப்பது அவா. ஆயினும், நாம் அதனைச் சாதாரணமாக அறிவதற்கில்லை. உதாரணமாக: நமக்குப் பலவிதஆடைகளிருப்பதாகவைத்துக் கொள்ளுவோம். இன்ன இன்ன சமயத்தில் இப்படியிப்படி யுடுப்பதென்று சிறிதும் ஆலோசியாதுடுத்தினால் அதனால் தீர்மானம் என்ற ஒன்று நம்மிடம் இருப்பதாக அறிவதற்கியலாது. மேலும், நாம் ஒருவருக்கு ஒரு வெகுமதியளிக்கவிரும்புவதாக வைத்துக்கொள்வோம. நாம் வெகுமதிப்பொருளைத் தெரிந்தெடுக்கத் தடுமாறும்பொழுது பிறருதவியை நாடுவோம்; ஆயினும், அவர்கள் சொல்வதையெல்லாம் மனதில் வாங்கிக்கொள்ளுவோமேயொழிய அப்படியே நடக்கத்துணியோம்.

அவர்கள் சொல்லைக்கேட்டு நமது அறிவை உபயோகித்து ஒருமுடிவுக்கு வருவோம். இப்படி அறிவை உபயோகிக்கும் வேலைக்குத்தான் சித்த விருத்தி யென்று பெயர். இதுவரை கூறியவற்றால், தீர்மானம் வேறு; சித்தவிருத்தியாகிய யோசனை வேறு என்று ஏற்படுகிறதல்லவா? இந்த யோசனையாவது வெளியிலே அவயவங்கள்செய்யும் வெலைபோல உளத்திலே உட்கருவிகள் செய்யும வேலையாம். யோசனையானது மனவலியுடையானொருவன் செயலன்றிக் கோழைமனத்தான்செயலாகாது. கோழையர்கட்கு வேறொருவருதவி அவசியமவேண்டும். நாளடைவில் அவர்கட்கு இயற்கையில் உண்டான சிந்தனாசக்தியும போய்விடும். மனவலியுடையவன் எப்பொழுதும் யோசனைபுரிவான். யோசனை செய்பவனே ஒரு தீர்மானத்துக்கு வருவான். யோசனையாலும் உட்கருவிகளின் இயக்கத்தாலும் ஒருவனுக்கு ஒருவிடயத்திற் றெளிவும் விளக்கமும் உண்டாகும்; அதன் பின்னரே அவன் விடயங்களைத் திருத்தமாகவும், யாவரும் அறிந்துகொள்ளும்படியாகவும் வெளியிட இயலும். இது பெரியவர்களுக்கே உண்டாவது; சர்வசாதாரண மன்று; எனுற் சிறுவர் விஷயத்திற் சொல்லவும் வேண்டுமோ. சிறுவர்கட்கு உளவலி அப்போதப்போது சிறிதுசிறிதாகத் தோன்றும். அது நாளடைவிற் பெருகி வளருமாறு சிறுவர்களை நல்வழியில் தாமே சுயேச்சையாக நடக்கும்படிவிடாமல் உளவலி மிக்குடையானொருவனிடம் விடுவோமாயின் அவனது பெருவலியின்கீழ்ச் சிறுவர்கள் அகப்பட்டு வருந்தி உபயோகமற்றவராவர்.

இனி, கௌரவம் (பெரியோனெனுந்தன்மை Personality யானது) உறுதி, விஷயத்தெளிவு, நன்மை தீமை யென்னும் பகுத்தறிவு, அற்பத்திலும் தம் மனப்போக்கின்படி நடத்தல், செய்து செய்து நன்மையைக்கண்டு தேர்ச்சியடைதல் ஆகிய இந்த அஸ்திவாரத்தின்மேல் நிற்கிறது. இவைகளெல்லாம் நன்னடக்கையின் அடையாளங்களென்பர். இவற்றுக்கு மெய்ப்பின் உறுதியும் வளர்ச்சியுங்கூட அவசியமாகும். அது நல்வழியிலேற்பட்டதாயிருக்கவேண்டும். நமது சிறுவர்கள், தாமே அறிதலினாலும், ஒன்றோடொன்றை யொப்பிட்டுப்பார்த்தலினாலும், முடிவுக்கு வருதலினாலும் உளத்தில் உண்டாகும் தடுமாற்றங்களை நீக்கி விஷயங்களிற் றெளிவடைந்து மனவலியைச் சம்பாதிக்கின்றனர். இதுவும் ஒருவகையான கல்வியாகும். இக்கல்வியால் ஒருவன் பிறரை

நம்பியிருத்தலைக் கைவிட்டுத் தானே ஒருவிஷயத்தில் முடிவுக்குவர இடமேற்படுகிறது. இடையறுவேலையால் ஒருவித முடிவுண்டாக ஒருவனது கௌரவம் மேம்பாடடைகிறது. இதனால் அதற்குமுன்பிருந்த உளத்தடுமாற்றம் நீங்குகிறது. ஒருவன் ஒழுங்காகவும தெளிவாகவும் யோசித்து, அதன்காரியமாக ஒரு விஷயத்தில் ஒரு முடிவுக்குவர முடியாதபடி விஷயங்களை நம்முடைய முயற்சியால் அவன் மனதிற் செலுத்தமுறபடுவோமாயின் அவன்மனவலி முதிர்ச்சியடையாது. இக்காலத்து உபாத்தியாயர்கள்; தம்மிடத்துவரும் மாணாக்கருக்கெல்லாம் உளவலியென்பதொன்று இல்லையென்றும், இருக்கவும் கூடாதென்றும் வாதாடுகின்றனா. இவ்விதம்சொல்லி வாதாடுவார்களானால், சிறுவர்கள் உளவலிகுன்றி, அறிவுகெட்டுக் கௌரவம் இன்னதென்று அறியாமற்போவதிற் றடையென்னே?

முன்பு, சித்தவிருத்தியென்னும் யோசனை ஒருவிடயத்தை ஆராயவும் அதன்மேல் ஒருவிதமுடிவுக்குவரவும் இடமாயிருப்பதென று சொல்லப்பட்டது. இது உளவலிக்குப் பெருந்துணையாக இருப்பது. ஆகையால் இதனை வளர்ப்பது மிகவும் அவசியமாகும். உடற்கூற்றுநூல் இந்த யோசனையை (சித்தவிருத்தியை) மனோபலத்தினின்றும் பிரிந்ததொன்றென்று கூறுகிறது. மக்களின்சிறப்பைப் பெருக்குவதற்கு இது பெருந்துணையாய் நிற்கின்றது. இது கண்கூடாகக் காணமுடியாததாயிருப்பதால் ஒப்பக்கூடியதாயில்லையென்று சிலர் வழக்காடலாம். ஒரு சிறு உதாரணம் பாருங்கள்! நமது கைகால்களை நீட்டவேண்டுமானால், தசைகளை உபயோகப்படுத்துகிறோம். ஒரேதசையெல்லாச்செயலுக்கும் உபயோகப்படவில்லையெனபது உங்களுக்கு நன்றாய்த்தெரியும். காலை நீட்ட ஒன்றும, முடக்கஒன்றும், உட்கார ஒன்றும், நடக்கவொன்றும் என்று இவ்விதமாகப் பல ஒன்றுகூடியும் தனித்தும் இயக்குகின்றன. சிறு குழந்தைகளை ஊன்றிநோக்குவோமாயின், அவை இக்கருவிகளைப் பெரியோர் உபயோகிப்பதுபோல் உபயோகிக்கமுடியாமற் சிறிது சிறிதாக உபயோகத்துக்குக் கொண்டுவருகின்றன என்பதையும், நாளாக நாளாக விரும்பாமலும் முயற்சியின்றியும் அவை நடைபெறுகின்றன வென்பதையும் அறிவோம். அதுபோலவே உளவலியும், சித்தவிருத்தி முதலிய பல ஒன்றுபட்டு நிரம்பவேண்டியதாயிருக்கிறது. இவ்வலியானது ஒன்றற்கொன்று மாறான

பல அவயவங்கள் ஒன்றுபடுவதால், திறப்படவேண்டியதாயிருக்கிறது. ஆகையினலே குழந்தைகளின் உள்ளமானது அவர்கள் சிறுபிள்ளைகளாயிருக்கும்போதே செம்மைப்படும்படி செய்யவேண்டும். இது தானகவே உண்டாவதல்ல. ஆகையால், சிறுவருளம் திருந்தித் திறப்படவேண்டுமானல் அவருக்குச் சுயேச்சையளித்துத் தகுதியானவழிகளில் அவருள்ளம் செல்லுமாறும், அது வளர்ந்து விரியுமாறும் செய்யவேண்டும். இதுவே ஆசிரியர்களின் முக்கியகடமையாகும். இவ்வாறு செய்யாவிட்டால், ஒரு குழந்தையின்காலைக் கட்டிவிட்டால் அது நடக்கமாட்டாது தவித்து நாளடைவில் நடப்பதையே மறந்துவிடுவதுபோலச் சிறுவருள்ளமும் பயனற்றதாய்விடும்.

(தொடரும்)

திருவாரூர்—இலக்கணவிளக்கபரம்பரை

சோமசுந்தரதேசிகர்.

---

உ

# பிழையுந் திருத்தமும்.

செந்தமிழில் இவ்விருபத்துமூன்றுந்தொகுதியின் (எட்டாம்பகுதியிலே) ௩௦௧-ஆம் பக்கம் ௧௪-ம் வரியில், பெயர்களேயாம் என்றிருப்பதைப் பெயரேயாம் எனவும், (ஒன்பதாம் பகுதியிலே) ௩௪௫-ம் பக்கம் ௪-ம் வரியில், புலவிவருணனைகளை என்றிருப்பதைக் கலவிவருணனைகளை எனவும், ௩௪௭-ம் பக்கம் ௧௩-ம்வரியில், குழீஇய என்றிருப்பதைத் தழீஇய எனவும், ௩௪௮-ம் பக்கம் ௩௧-வரியில், வெயிலினஞ்செல்வன் என்றிருப்பதை வெயிலிளஞ்செல்வன் எனவும், ௩௫௩-ம்பக்கம் ௨௪-ம் வரியில், அரக்கர்போன்றார்க்கு என்றிருப்பதை அரக்கர்போன்றார்கண்களுக்கு எனவும் திருத்திப் படித்துக்கொள்க.

மேலைச்சிவபுரிச் சன்மார்க்கசபையின்

# 16-ம் ஆண்டு நிறைவுத் திருவிழா.

---

புதுக்கோட்டை அரசினர் ஆட்சியுட்பட்ட மேலைச்சிவபுரி என்னும் இந்நகரில் இறைவன் திருவருளால் நடைபெற்றுவரும் சன்மார்க்க சபையின் பதினாறும் ஆண்டுநிறைவுத் திருவிழா நிகழும் குரோதன௵ ஆவணிமீ ௧௧, ௧௨, ௧௩-ஆம் தேதிகளில் சிதம்பரம் ஸ்ரீ மீனாக்ஷி தமிழ்க் கல்லூரித்தலைமையாசிரியர் (Principal) மஹாமஹோபாத்யாய பிரமஸ்ரீ வே சாமிநாதையரவர்கள் தலைமையில் பெருஞ்சிறப்போடு நடைபெற்றது.

அந்நாட்களில் இராமநாதபுரம் சேது சமஸ்தான வித்வான் ஸ்ரீ ரா. இராகவையங்காரவர்கள், மகிபாலன்பட்டி வித்வான் ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியாரவர்கள் முதலிய சிறந்த பல பண்டிதர்களின் அரிய உபந்யாசங்கள் நிகழ்ந்தன. அம் மாபெருங்கூட்டத்தில் சேதுசமஸ்தான வித்வான் ஸ்ரீ ரா. இராகவையங்காரவர்களுக்கு "மஹாவித்வான்" என்னும் பட்டமும், மகிபாலன்பட்டி வித்வான் ஸ்ரீ மு கதிரேசச்செட்டியா ரவர்களுக்குப் "பண்டிதமணி" என்னும் பட்டமும் சன்மார்க்க சபையார் விரும்பியவண்ணம் மஹாமஹோபாத்தியாய ஸ்ரீமாந். ஐயரவர்களால் பொன்னாடைகள் புனைந்து மிக்க மகிழ்ச்சியோடு வழங்கப் பெற்றன.

இவ்விருபெரும்புலவர்கட்கும் வழங்கப்பெற்ற இப்பட்டங்கள் மிகவுந் தகுதியுடையனவென்று அங்குக் குழுமியிருந்த அறிவுடைப் பெரியார்பலர் பாராட்டிப்பேசினர்.

இங்ஙனம்,

மேலைசிவபுரி
குரோதன௵
ஆவணிமீ ௧௫௨

வ. பழ. சா. சாமிநாதன்செட்டியார்,
தலைவர், சன்மார்க்கசபை.

---

# இராஜராஜதேவருலா.

## முன்னுரை.

இவ்வுலா, சுமார் 800 வருடங்கட்குமுன்னர் அரசுபுரிந்துவந்த ஒரு சோழர்பெருமகனைத் தலைவனாகக்கொண்டு பாடப்பெற்றமைந்த புராதனநூல். தென்னிந்திய சரித்திர ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவது. சில மாசங்கட்குமுன்பு கோடைவிடுமுறைக்காலத்தில் நான் திருவனந்தபுரம்சென்றிருந்தபொழுது, திருவிதாங்கூர்ச் சிலாசாஸன பரிசோதகரும் எனது ஆப்தநண்பருமாகிய ஸ்ரீமாந். S. இராமநாதையரவர்கள் இந்நூலின் கையெழுத்துப்பிரதியொன்று அன்புகூர்ந்து உதவினார்கள். அவர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனம் உரிமையாகின்றது. இப்பிரதியை நான் பெற்றுக்கொண்டபொழுது, வேறு பிரதிகளும் சம்பாதித்து ஒப்புநோக்குதல் முதலியன செய்து திருத்தமுறப் பதிப்பிக்கவேண்டுமென்பது எனது நோக்கமாயிருந்தது. ஆனால், பிரதிகள் அகப்படுவது அரிதாகமுடிந்தமையால், அந்நோக்கத்தைத் தற்காலம் கைவிடவேண்டியதாயிற்று. கிடைத்துள்ள கையெழுத்துப் பிரதிதானும் இடையிடையே சிதைந்தும் பிறழ்ந்தும் கூடியும் குறைந்தும் மிகப் பிழைபட்டிருக்கின்றமையால், அங்கங்கே கீழ்க்குறிப்பில் உத்தேச-பாடங்கள் தரப்பட்டுள்ளன இப்பாடங்கள் சம்பந்தமானவரையில், ‘செந்தமிழ்’ உதவிப்பத்திராசிரியராகிய இராமாநுஜ ஐயங்காரவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். பல பிரதிகள் கொண்டு ஆராய்ச்சிசெய்யப்பெறும் திருத்தமானபதிப்பு இனி வெளிவருதற்கு இம்முயற்சியும் பயன்படலாமென்றுகருதி, இப்போது இந்நூலைக் கையெழுத்துப்பிரதியிலுள்ளவாறே பிரசுரிக்கின்றேன்.

இதனைச் ‘செந்தமிழ்’பத்திரிகைவாயிலாக வெளியிடுவதற்கு அன்புகூர்ந்து அநுமதியளித்த பத்திராசிரியரவர்கள்பால் நான் மிக்க நன்றிபாராட்டுகின்றேன்.

S. வையாபுரிப்பிள்ளை, B.A. B.L.

## நூல்.

1. புயல்வண்ணன் பொற்பதுமப் போதிற் புவனச்
செயல்வண்ணங் காட்டிய சேயோன்—உயிரனைத்துங்

2. [1]காட்டும் பதின்மரினுங் காசிபன் ஏழ்புரவி
பூட்டுந் தனியாழிப் பொற்றேரோன்—ஓட்டி

3. யறவாழி யந்தணர்மே லூர்ந்தோன் அவனி
புறவாழி முட்டப் புரந்தோன்—மறையோர்க்குப்

4. பூவிற் கிழத்தியையும் பூமிக் கிழத்தியையும்
நாவிற் [2]பழுதஞ்ச நல்கினான்—வாவியிற்

5. புக்குத் துறையிற் பகைப்புலியும் புல்வாயும்
ஒக்க வொருகாலத் தூட்டினான்—புக்கான்

6. [3]மறுநிறை யென்று [4]சரணடைந்து வஞ்சப்
புறுநிறை புக்க புகழோன்—அறுநீர்த்

7. தரங்கக் கடலேழுந் தன்பெயரே யாகத்
துரங்கப் பசுநாடித் தொட்டோன்—வரங்கொள்

8. சுரநதி தன்பெய ராகச் சுருதி
[5]வரநதி சாபத்தை மாய்த்தோன்—தரணிபர்

9. பல்லன் மரபை ரகுவின் மரபென்று
சொல்ல வுலகளித்த தொல்லையோன்—[6]சொல்லலால்

10. வந்திரந்த வானவர்க்குத் தானவர் போர்மாய
இந்திரனை யேறாக்கி யேறினான்—முந்தும்

11. ஒருதோரா லையிரண்டு தேரோட்டி யும்பர்
வருதோரால் வான்பகையை மாய்த்தோன்—பொருது

12. சிலையால் வழிபடு தெண்டிரையைப் பண்டு
மலையால் வழிபட வைத்தோன்—நிலையாமே

13. வாங்குந் திருக்கொற்ற வாளொன்றின் வாய்வாய்ப்பத்
[7]தூங்கு புரிசை துணித்தகோன்—வீங்கு

---

[1]காட்டொன்பதின்மரினுங். [2]பழுதஞ்சி. [3]மறுனிறை, [4]சரணடைந்த, [5]வரனதி, [6]செல்லலால், [7]தூங்கும் புரிசை,

14. [1]குடகடற்குஞ் சார்வு குணகடலே யாகும்
வடகடற்குந் தெனகடற்கு மன்னன்—முடுகிக்

15. கரையெறிந்த [2]பொன்னிக் கடலேழுங் காப்ப
வரையெறிந்த மன்னர்க்கு மன்னனை—தரையின்

16. பெருமகளைத் தீவேட்ட பின்னருஞ் சேடன்
திருமகளைக் கல்யாணஞ் செய்தோனை—பொருநிருபர்

17. கன்மாலை மார்புங் கடவுள் வடமேருப்
பொன்மாலை மார்பும் புலிபொறித்தோன்—சொன்மாலை

18. நல்லவன பொய்கை களவழி நாற்பதுக்கு
வில்லவன காற்றளையை விட்டகோனை—புல்லார்

19. தொழும்புடைய வாகத்துத் [3]தொண்ணூறு மாறு
தழும்புடைய சண்டப்ர சண்டன்—[4]எழுபகலில்

20. ஈழ மெழுனூற்றுக் காதமும சென்றெறிந்து
வேழந திறைகொண்டு மீண்டகோன்—சூழி

21. மதகயத்தா லீரொன பதுசுரமும் மட்டித்
துதகையைத் தீர்த்த வுரவோன்—[5]முதுவறற்

22. கங்கையும் நன்மதையுங் கௌதமையுங் காவிரியும்
மங்கையுட னாடு மார்பினோன்—பொங்கி

23. யலைவீசும் வேலை யனைத்தினுந் தெம்மீன்
வலைவீசி வாரிய மன்னனை—கொலையானை

24. பப்பத் தொருபசிப்பேய் பற்ற வொருபரணி
கொப்பத் தொருகளிற்றாற் கொண்டகோன்—[6]வெப்பொருவா

25. பாட வரிய [7]பரணிப் பகட்ட டணிவீழ்
கூடலார் சங்கமத்துக் கொண்டகோனை—நாடு

26. கலகமுஞ் சுங்கமுங் காய்கலிபு மாற்றி
யுலகைமுனை காத்த வுரவோனை—பரவுந்

---

[1]குடகடற்குஞ் சார்ந்த குணகடற்கு மார்க்கும். [2]பொன்னிகடலேழுங் கோட்ப. [3]தொண்ணூறு மாறும். [4]எழும்பகலில். [5]முதுவாற். [6]ஒபபொருவர். [7]பரணிபகட்டணிவீழ்.

27. தரணி யொருகவிகை தங்கக் கலிங்கப்
பரணி புனைந்த பருதி—முரணி

28. புரந்தன நேமி பொருவ வகிலந்
துரந்தன விக்கிரம சோழன்—பரந்தபனென்

29. றூய பெயர் கொண் டவிலாண்ட மும்புரந்த
சேய பெரிய திருக்குலத்து—நாயகன்

30. சிற்றம் பலமும் திருப்பெரும்பே ரம்பலமும்
மற்றும் பலபல மண்டபமுஞ்—சுற்றிய

31. மாளிகையும் பீடிகையு மாடமுங் கோபுரமுஞ்
சூளிகையு மத்தெருவுந் தோரணமும்—ஆளுடையான்

32. கோயிற் றிருக்காமக் கோட்டமு மக்கோயில்
வாயிற் றிருச்சுற்று மாளிகையுந்—தூய்செம்

33. முறைவிட்ட வேற்று முடிமன்னர் தத்தஞ்
சிறைவிட் டரசருளிச் செய்து—கறைவிட்ட

34. [1]மைஞ்ஞாக மெட்டு [2]மதஞக மோரெட்டும்
[3]பைஞ்ஞாக மெட்டும் [4]பாங்கெடுத்துத்—திஞ்ஞாலந்

35. தாதைக்குந் தங்கள் தபனற்குந் தோலாத
போதத் திமிரப் பொறைநீக்கி—மாதரில்

36. ஒக்க வபிடேகஞ் செய்யு முரிமைக்கட்
டக்க நிலைமைத் தனித்தேவி—மிக்க

37. புவன முழுதுடைய பொற்றொடியுந் தானும்
அவனி சுரர் சுருதி யார்ப்ப—[5]நவநிதிதோய்ந்

38. [6]தேத்த கருங்கடவு ளெல்லையி லானந்தக்
கூத்தைக் களிகூரக் கும்பிட்டும்—போற்றினமேற்

39. றில்லைத் திருமன்றின் முன்றிற் சிறுதெய்வத்
தொல்லைக குறும்புத் தொகுத் தெடுத்து—மல்லற்

40. றசும்பு வாளாகனிற் றண்பெரு நாவல்
அசும்பு பசும்பொன் அடுக்கி—விசும்போர்

---

[1]மைந்நாக. [2]மதநாக. [3]பைந்நாக. [4]பரங்கெடுத்—திஞ்ஞாலந். [5]நவநிதி தோய்ந். [6]தேத்தக் கருங்கடவு.

41. அலகை யிகந்த வகலகுல [1]வச்சிரம்
பலகை ததும்பப் பதித்து—மலர்கவிதை

42. காக்குங் கடலேழின் முத்தும் வாகங்கை
தூக்கு மருவியிற் சூழ்போக்கி—[2]நோக்குங்

43. தொடுக்குஞ் சிரச்சேடன் சூளா மணிகொண்
டெடுக்குந் திருத்திய மேற்றி—யடுக்கிய

44. தூய வயிரத்தால் [3]வாவியாய்ச் சூழ்கிடந்த
பாய மரகதத்தாற் [4]பாசடையாய்ப்—போய

45. பருமுத்தா [5]லாவிலியாப் பதுமரா கத்தால்
திருமிக்க செந்தா மரையாப்—பெருவர்க்க

46. நீலத்தால் வண்டின் [6]நிரையா யுரையிகழ்ந்த
கோலத்தாற் கோயிற் பணிகுயிற்றிச்—சூலத்தான்

47. ஆடுந் திருப்பெரும்பே ரம்பலமுங் கோபுரமு
மாடம் பரந்தோங்கு மாளிகையுங்—கூடிப்

48. [7]பொலங்கோட் டுரைமேருப் பூதரமும் போல
[8]வலங்கோட் டிகிரியு மானத்—[9]தலங்கொண்

49. நிலையேழு கோபுரமுங் கண்மே னெருங்கு
மலையேழு மென்ன வகுத்துத்—தலையில்

50. மகரங்கொள் கோபுரமும் வான விமானச்
சிகரங்க ளாகித் திகழ—நிகரில்

51. எரிபொற் படர்பாறை யென்னலா மெங்கும்
விரிபொற் றிருமுற்றம் மின்னச்—சொரிபொற்

52. கடாரம் பனிநீர் கவினிக் கனபொற்
றடாகங்க ளாகித் ததும்ப—விடாது நின்

53. றற்பக லாக வணந்த சதகோடி
கற்பக சோதி கதிர்த்துவரப்—பொற்பூண்

[1]வச்ரம். [2]நோக்கங். [3]வாவியாச். [4]பாசடையாப். [5]லாவலியாப் பத்மரா கத்தால். [6]நிரையா வுரையிகந்த. [7]பொலங்கொ டுறைமேருப் [8]வலங்கொ டிகிரியு. [9]தலங்கொள்.

54. வரமகளிர் தத்தம் பணிமுறைக்கு வந்து
சுரர்மகளி ராகத் துவள—வொருதான்

55. பிறக்கும் இமயப் பெருங்கடவுள் வெற்பை
[1]மறைக்கும் படிசெல்வம் மல்கச்—சிறக்கும்

56. இருக்காதி யெம்மறையும் எவ்வுலகும் ஈன்றாள்
திருக்காமக் கோட்டந் திகழ்த்தி—வருக்கப்

57. புனையா மணியாலும் பொன்னாலு மின்ன
மணியா லொருதேர் வகுத்து—முனைவன்

58. திருவீதி யீரிரண்டுந் தேவர்கோன் மூதூர்ப்
பெருவீதி நாணப் பெருக்கி—வருநாளிற்

59. பொங்கார் கலிசூழ் புவனம் பதினாலுங்
கங்கா புரிபுகுந்து கண்டுவப்பத்—தங்கள்

60. புவனி பெறவந்த பூபாலர்க் கெல்லாம்
பவனி யெழுச்சி பணித்துக்—கவினு

61. மடமயி லொக்க மகுடங் கவித்தா
ளுடனுறை பள்ளி யுணர்ந்து—தடமுகில்

62. [2]அஞ்சன ........ல மபிடேகஞ் செய்ததென
மஞ்சன மாடி வழிமுதற்—செஞ்சடை

63. வானவர் பொற்றாள் வணங்கி மறையவர்க்குத்
தான மனைத்துந் தகைபெறுத்தி—வானிற்

64. கிளைக்குஞ் சுடரிந்த்ர நீலக் கிரியை
வளைக்கு மிளநிலா [3]வானத்—திளைக்கும்

65. உருவுடை யாடை தரித்தொரு வெள்ளைத்
திருவுடை யாடை திகழ—வொருபுடை

66. பச்சை யுடைவாள் விசித்த தொருபசும்பொற்
கச்சை நவரத்நக் கட்டெறிப்ப—வச்ச

67. வெருவுதர வெல்லா வரவிகளும் போய்வீழ்ந்
திருவுதர பந்தனமுஞ் சேர்த்தித்—திருமார்பிற்

---

[1]மறக்கும். [2]அஞ்சன சைல. [3]மானத்.

68. கார்க்கடல் மீதே கதிர்முத்தத் தாமங்கள்
பாற்கடல் சேர்த்த தெனப்பரப்பக்—கார்க்கடலில்

69. வந்த வனச மதிபோல மற்றது
[1]தந்தக் கடவுள் மணிதயங்கப்—பந்தச்

70. சுரர்கனகத் தோள்வலயச் சூட்டுக் கவித்த
உரக பணாமணியும் ஒப்ப—விரவி

71. மகரக் [2]குழைத்திருத்தோள் மேல்வந் தசையச்
சிகரச் சுடர்போற் றிகழ—நிகரின்

72. முடியின் மணிவெயிலு முத்தக் குடையின்
வடிவு நிலவை மலைப்பப்—படியின்

73. வயங்கு கடக மகுடாதி மின்னத்
தயங்கு பெரும்போது சாத்தி—முயங்கிய

74. செவ்வி நுதலிற் றிருநீற்றுப் புண்டரம்
வவ்வி மகளிர் மனங்கவற்ற—நொவ்விய

75. நாவியு மான்மதமுஞ் சாந்து நறையகி
லாவியு மாகண்ட மும் வளைப்பத்—தீவிய

76. தோண்மாலை வாசச் சுழுநீர் குழல்சேர்த்திக்
கோண்மாலை கூசக் குளிர்கொடுப்ப—நாண்மாலை

77. வேந்தர் முடிவணங்க வேதிய ரோத்தெடுப்பப்
போந்து புறநின்ற போர்க்களிற்றை—வேந்தரின்

78. மாக்காத லானுவரு மாறழிந்த மீனவனும்
வீக்காம லெங்குள்ள மெய்ம்முகிற்கும்—கோக்கடவுள்

79. எட்டாத வச்சிரமு மெல்லா [3]வுறுவெறும்
வெட்டாம லெங்குள்ள வெற்பினுக்கு—முட்டா

80. முதுவாய் வடவையு முன்னொன்று கோளுங்
கதுவாய வெல்லாக் கடற்கும்—பொதுவாய்

81. அபயங் கொடுக்கு மயிரா [4]பதத்தை
யுபய வயக்கோட் டுரிமை—ப்ரமையின்

---

[1] தந்த கடவுள். [2] குழைதிருத்தோள். [3] வருமேறும். [4] வதத்தை.

82. பொருத்தந் தருமொரு மேருப் பொருப்பை
யெருத்தந் திருக்கவின வேறித் —திருத்தரு

83. பள்ளிப் [1]பலதொங்கச் சோலை பகல் விலக்க
வெள்ளிக் கவிகை மிசையோங்க—ஒள்ளிய

84. ஒற்றை வலம்புரி யூத [2]வளபின்பு
மற்றை யுலகின் வளைகலிப்பக்—கற்றைக்

85 கவரி யிரட்டக் கடவுள் முரசார்த்
துவரி யுவாவாடி யொப்ப—அவிர்வாளுஞ்

86. சங்குந் திகிரியுஞ் [3]சானகமுந் தண்டகமும்
எங்குஞ் சுடர்விட் டிடர்களையக்—கொங்கத்து

87. விற்கொடியு மீனக் கொடியுங் கொடுவரிப்
பொற்கொடி யொன்றின் புடைபோதத்—தெற்கின்

88. மலையா நிலம்வரவே வார்பூங் கருப்புச்
சிலையான் வரவு தெரியத்—[4]தொலையா

89. வீசுந் [5]தவலை விசும்புகூர் மங்குலால்
வாசவன் வந்த வரவறியக்—கூசாதே

90. யாவ ரொழிவா [6]ரினும்வரவே மற்றுள்ள
தேவர் வருவ ரெனத்தெளிய—யாவர்க்கும்

91. பின்னர் வழங்கு முழங்கு பெருங்களிற்றுத்
தென்னர் முதலானோர் சேவிப்ப —[7]முன்னர்

92. பாவி யுலகிற் பலமண்ட லீகர்
புரவி மிசைகொண்டு போக—[8]அருவிபாய்

93. விட்டு மதம்பொழிய [9]வேழத் திசைவேழம்
எட்டு மொழியப் [10]புகுந்தீண்டிக்—கட்டி

94, இரவிக்கு [11]ணிப்பன வேழ மொழியப்
புரவிக் குலமுழுதும் போத—விரவி

---

[1]பலதொங்கற் சோதி. [2]வதன்பின்பு. [3]சார்ங்கமுங் தண்டமும். [4]தொலை யாது. [5]இவலை. [6]ரிவைவரவே. [7]முன்னர்ப். [8]அருவியாய். [9]வேழந். [10]புகுந்தீண் டக். [11]ணிற்பன,

95. யுடைய நிதிக்கடவு ளூர்தி யொழிய
அடைய நரவெள்ள மார்ப்ப—விடையே

96. யெழுந்த துகளுருவ மேறியுஞ் சுண்ணம்
விழுந்த துகளுருவம் வீழ்ந்துந்—தொழுந்தகைய

97. விண்ணுலகு மண்ணுல காக விளங்கிய
மண்ணுலகு [1]பொன்னுலாய் மாறுட—[2]எண்ண

98. [3]மாகதரு மங்கலரும் பாடகரும் விஞ்சையரும்
பூகத ராயினர் போற்பரவ—நாகர்

99. கொழுந்தெழு கற்பக சாதி குவித்துந்
தொழுந்தொழு மன்னர் சொரிந்தும்—எழுந்துதன்

100. [4]கைமஞ்ழ பெய்துங் கனகப் பெயற்றூர்ந்த
[5]மைமழை மாட மறுகணைந்தான்—தம்முடைய

[குழாங்கள்.]

101. சாலை தொறுந்திரள்வார் சாளரங்கள் கைக்கொள்வார்
மேலை நிலாமுன்றின் மேற்றெருகுவார்—.........

102. தெற்றி யடைய மிடைவார் சிலமாதர்
நெற்றி சுருங்க நெருங்குவார்—.........

103. மாளிகை யேறுவார் மண்டபத்தின் மண்டுவார்
சூளிகை மாடந் தொறுந்துறுவார்—.........

104. இரண்டு மருங்கினு மிப்[illegible] யொப்பத்
திரண்டு பலரெதிரே சென்று—.........

105. கரும்பு ருவவில்லுங் கண்மல ரம்பும்
பெரும்புவன வெல்லை பிடிப்பச்—.........

106. நிரைக்கு நிரைமூல நீலக்குழாங்கள்
இரைக்கு மிரைமொகுமோ கென்ன—.........

107. மாகான கங்கள் ஞிமிறுவாய் வைத்தூதுங்
காகாள மென்னும் படிகலிப்ப—.........

---

[1]பொன்னுலகாய். [2]எண்ணரிய. [3]மாகதரும் பாடகரு மங்கலரும் விஞ்சையரும். [4]கைம்மழை. [5]மைம்மழை.

108\. ......................ருழ்குழைதோடொய்ய
மகரம் பிழற் கொடியின் வாய்ப்ப

109\. சேனு முகங்........தெறிப்ப வதனெதிரே
சேனு பாாக மெனத்திகழப்—பூநாறுஞ்

110\. சுண்ண மெதிர்தூஉ யுடனே தொடியுந்தூஉய்
வண்ணமிழப் பத்தம் மனமிழப்பார்—மண்ணுலகில்

111\. இன்னாற் பகைவ னிவன்கா ணகளங்கன்
மன்னர்க்கு மன்னன் மகனென்பார்—முன்னர்

112\. முதுகுல மன்னர் முடிவணங்க வந்த
[1]விதுகுல நாயகிசே யென்பார்—[2]குதுகுலங்

113\. கண்வருஞ் செவ்விக் கடவுட் டிசாதேவ
[3]ரெண்வருங் காணு மிவனென்பார்—விண்வருந்

114\. தேவர்க்கு நாயகர்க்குந் தெய்வ முனிவர்க்கும்
யாவர்க்குங் காவ லிவனென்பார்—தீவிய

115\. மாதவியுஞ் செங்கழு நீரும் வலம்புரியுந்
தாதகியுங் கொ............லோர்—மாதை

116\. யொறுக்கு மிதிலை யொருவில்லைத் தொல்லை
யிறுக்கு மவனிவன் என்பார்—மறுக்காமற்

117\. சென்று கணைகட வார்த்துத் திருக்குலத்து
நின்ற பழிதுடைப்பாய் நீயென்பார்—இன்றளவுந்

118\. துஞ்சு துயிலிழந்து கண்டார் குழற்றுளைந்து
நஞ்சு குமிழியெழு நாடென்பார்—பஞ்சவனே

119\. வாடையினுந் தண்ணென்னு மந்தா நிலமெமக்குக்
கோடையினுந் தீது கொடிதென்பார்—கூடி

120\. முருகுவார் கூந்தலார் மொய்த்தலர்ந்த கண்ணும்
பருகுவார் போல்விழுந்து பார்ப்பார்—பொருமதனன்

121\. பார்த்தானே புங்கானு புங்கம் படப்பகழி
தூர்த்தானே யாதென்று சொல்லுகேன்—ஆர்த்தான்

---

[1]வெதுகுல, [2]குதுகலங், [3]ரெண்மருங்,

122. உளைத்தான் சிலைக [1]ளொடுகோடி கோடி
வளைத்தான் கரும்புலகின் மாய்த்தான்—இளைத்தான்

[பேதை]

123. இளையர் பலர்புகழ ஈங்கொருத்தி முத்திற்
புனையுஞ் சிறுதொடிக்கைப் பூவை—கனமுகினேர்
124. ஆடாத தோகை யலராத புண்டரிகம்
பாடாத பிள்ளைப் பசுங்கிள்ளை—சூடாத்
125. தளிராத சூதம் தழையாத வஞ்சி
குளிராத திங்கட் குழவி—யளிகள்
126. இயங்காத தண்கா இறக்காத தேறல்
வயங்காத கற்பக வல்லி—[2]தயங்கிரை
127. கூழைச் சுருள்முடிக்குக் கூடுவதுங் கூடாதா
[3]மேழைப் பருவத் திளம்பேதை—சூழும்
128. நிலத்தாய வெள்ளம் நெருங்க மருங்கில்
முலைத்தாயர் கைத்தாயர் மொய்ப்பத்—தலைத்தந்த
129. தொக்க [4]கவிகை குலோத்துங்க சோழனை
மிக்க பரந்தபனை மீனவனைப்—புக்கார்
130. வணங்க வணங்கி வழுத்த வழுத்தி
வணங்க வணங்கா....தகைலாள்—குணங்காவல்
131. மன்னன் புனைந்த திருமுத்தின் மாலையை
யன்னம் படிந்தாட வாறென்னும்—பின்னருங்
132. கோவைத் திருப்பள்ளித் தொங்கற் குழாங்கிளிக்கும்
பூவைக்கும் நல்ல பொழிலென்னும்—பாவை
133. யயிற்கு மிருகோட் டயிரா பதத்தை
மயிற்கு மலையென்னு மானுங்—குயிற்கிளவி
134. தேன்வாழுந் தாமஞ்சூழ் தெய்வக் கவிகையை
மான்வாழு மாசின் மதியென்னும்—கோனுடைய

[1]ளொருகோடி. [2]தயங்கிரக் கூழை சுருள். [3]ம்மழை பருவத். [4]கவிகைக்.

135. பாங்கு வளையாழிப் பார்மடந்தை தன்னுடைய
பூங்குவளை மாலை புனைகென்னுந்—தேங்கமலத்

136. தற்புத வல்லி [1]யவளே யிறந்துடைய
கற்பக மாலையைக் காதலிக்கும்—பொற்பார்

137. பொலம்புரிக் காஞ்சிப் புகழ........
வலம்புரி மாலைக்கு மாழ்கும்—பொலந்தொடிப்

138. போரார வாரப் பொலங்கொடி பெற்றுடைய
[2]போரா ரமலைக்குப் பேழ்கணிக்கும்—சேரியன்

139. ஏந்திழை மாத ரெவர்க்கும் பொதுவாய
பூந்துழாய் மாலை புனைகென்னும்—வேந்தன்முன்

140. இவ்வகை யல்ல திலங்கிழையார் மால்கூரு
மவ்வகை கூரா ளயலொருத்தி—எவ்வுலகும்

[பேதும்பை]

141. முற்ற முடிக்கு முடித்தாம வேள்சூட்டுங்
கொற்ற முடியனைய கொண்டையாள்—அற்றைநாட்

142. சாத்து மபிடேகத் தாரைபோற் றாழ்கின்ற
கோத்த பருமுத்தக் கோவையாள்—தேத்து

143. [3]விடம்போல் மணிகட்கு வேழங்கட் கெல்லாங்
கடம்போற் கலையூறுங் கண்ணாள்—அடங்க

144. வயிர்ப்பான் மறலி [4]மகளூருக்கொ ளீதென்
றயிர்ப்பா ரயிர்க்கு மழகா—ருயிர்ப்பாவை

145. கொல்லிக்கு முண்டெயி [5]ருண்மைத்திரி கூடத்துஞ்
சொல்லிக் கிடக்குந் துணைமணிக்கும்—வல்லி

146. யிதற்கு நடைவாய்த் துயிர்வாய்த்த தென்ன
மதற்கு மொருதிரு மாது—[6]முதற்றண்

147. பணிவாயி லாயம் [7]பராந்தலக கிள்ளைக்
கனிவாயின் முத்த மருளி—மணிவாயிற்

---

[1]யவளையிரந்துடைய. [2]பேரார மாலைக்குப். [3]விடம் போற் பணிகட்கு. [4]மகனூருக். [5]ராண்மைதிரிகூடத்துச். [6]முதற்றன். [7]பராந்தகலக்.

148. சொல்லா யெனக்கன்னை சொல்லாயே நீயன்றி
வல்லாய் பிறவறிய வல்லவோ—[1]கல்லாணக்

149. கோழித் திருந்தாத கொற்றவற்கு வெற்றிப்போ
ராழித் திருக்கை யபயற்கு—வாழியாய்க்

150. காக்குங் கடலேழு மாடுங் கடாரமோ
வாக்கு நதியேழு [2]மாராரமோ—தேக்கிய

151. பண்ணேழுங் [3]கன்னுவ தங்கிஷமோ? பண்டளந்த
மண்ணேழும் [4]வாகு வலயமோ—தண்ணறுந்

152. தூவ னறவப் பொழிலேழுந் தொங்கலோ
காவன் மலையேழுங் கந்துகமோ—மேவலாய்ச்

153. செய்யு நலத்துடைய கோளேழுந் தீபமோ
பெய்யு முகிலேழும் பேரியமோ—வையகங்

154. கூறு மவையிவை யென்று குறுந்தொடி
வேறு தனிவினவு மெல்லைக்கட்—சீறும்

155. ஒருத னடியின் மடிய வுபய
மருது பொருத [5]வயனை—விருதன்

156. விலையி னமுத மதன விமலை
முலையின் முழுகு முதல்வன்—வலைய

157. கனக சயில வெயிலி கணவன்
அனக னமல னதுலன்—தினகரன்

158. வாசவன் றென்னன் வருண னளகேசன்
கேசவன் பூசக்ர கேயூரன்—வாசிகை

159. யாழிப் பெருமா னபயன் அனபாயன்
சூழிக் கடாயானை தோன்றுதலும்—தாழாது

160. சென்றாள் திருமுன்பு செந்தளிர்க் கைகுவித்து
நின்றாள் இனிவறிதே நிற்குமே—யென்றானுங்

161. கோடு கமழ்கண்டல் கொண்டற்கு [6]மாலதியோ
[7]னேடு நகாதே யுடையாதே—யீடற

---

[1]கல்யாணக். [2]மாறுமோ. [3]கன்னுவதம்சமோ. [4]வாகுவலையமோ. [5]வயவன். [6]மாலதிபோன். [7]றேடு நகாதே யிடையாதே.

162\. வந்த கொடுங்குன்ற வாடைக் [1]கிளங்கொன்றைக்
கொந்து கொடாதே குழையாதே—செந்தமிழ்த்

163\. தென்ற லெதிர்கொண்ட தேமாங் கொழுங்கன்று
மன்றல் கமழாதே மாளாதே—யென்றுபோய்ச்

164\. சூதள வல்ல துணைமுலை தூயகண்
காதள வல்ல கடந்தபோய்—மாதர்

165\. உருவத் [2]தளவென் றொளியுக்க மாக்கம்
பருவத் தளவல்ல பாவம்—தெருவத்

166\. [3]துடைவ துடையாதா முள்ள முறவோர்த்
தடைவ தடையாதா மச்சம்—கடல்கடைந்த

167\. சேயினு நல்ல பெருமாள் திருத்தடந்தோள்
தோயினுந் தோய மனந்துணியு—மாயினும்

168\. வந்து தடந்தோ [4]ளிணைப்பணைப்புக் கண்டிலன்
காந்து மதிவதனங் கண்டிலன்—பூந்தடந்

169\. தேரி னகலுந் திருந்தல்குல் கண்டிலன்
காரி னிருளளகங் கண்டிலன்—மாரவேள்

170\. எய்யு மொருகருப்பு வல்வில் லெடுத்தானே
கொய்யு மலரம்பு கோத்தானே—தையல்மால்

171\. மந்தா கினிக்கோன் றிருப்புருவ வார்சிலையுஞ்
செந்தா மரைக்கண்ணுஞ் செய்ததே—நொந்தார்

172\. [5]வளைத்தளி செங்கை மடுத்தெடுத்து வாசக்
[6]கிளைத்தளி பாயக் கிடத்தித்—...[7]ளைத்தொகை

173\. [8]பாய்க்குழ லென்று பாவு மனலூதும்
வேய்க்குழ லென்று விளம்பியுந்—தீக்கொள்

174\. [9]நிகழ்நிலா வென்று நிருபகுல துங்கன்
புகழ்நிலா வென்று புகன்றும்—இகலிய

---

[1]கிளங்கொன்றை. [2]தளவன். [3]துடைவ துடையாத வுள்ள முரவோர்க்—கடைவ தடையாத வச்சம். [4]ளிணைப்பசப்புக். [5]வளைத்தளிர்ச் செங்கை. [6]கிளைத் தளிர்ப் பாயற் கிடத்தித். [7]துளைத்தொகை. [8]யாய்க்குழ லன்று.:[9]நிகழ்நிலா வன்று.

175. [1]பல்லிய மென்று பாராச கேசரி
வல்லிய மென்று மருட்டியும்—எல்லிய

176. [2]கல்லார மென்று கதிரோன் திருமருமான்
மெல்லார மென்று விளம்பியும்—நல்லார்

177. அருத்தி யறியா ரவையிவை யென்று
திருத்தி விட[3]விடர் தீர்ந்தாள்—ஒருத்தி

[மங்கை]

178. உருவ வரிக்கண் ணொழுக வொழுகப்
புருவ முடன்போதப் போத—வெருவி

179. வனமுலை விம்மி வளர வளரப்
புனைதோள் புடைபோதப் போத - வினையார்

180. அருங்கலை யல்கு லகல வகல
மருங்குபோ யுள்வாங்க வாங்க — நெருங்கு

181 பரவவர ராச பயங்கரன்மேல் வேட்கை
வரவர வற்றுத மங்கை—பொருவரு

182. தேமி....ங்குங் காலையி....செவ்வி
தாமரைக்கே சாலுந் தரத்ததோ—காமர்

183. அமுத மதியத் தலர்நிலா முற்றுங்
குமுத நறுமுகைக்கே கூறோ—நமதுகார்

184. கானின் மடமயிற்கே காணியோ தண்ணிள
வேனில் குயிற்கே விதித்ததோ—தேனிமிருந்

185. தண்டா மரையாள் தலைவனை யானும்போய்க்
கண்டாலென் னென்னுங் கடைப்பிடியாள்—பண்டை

186. யொளியா ரணங்காது மமைத்தா மென்றுங்?
தெளியாத வாறே தெளிந்துங்—களியன்னம்

187. வாவிக் கரையில் வாரீ ராமகளிர்
சேவிக்க நின்றுடுஞ் செவ்வியாள்—காவிற்

---

[1]பல்லிய மன்று, [2]கல்லார மன்று, [3]விடாய் தீர்ந்தாள்,

188. புகுதி லவன்றெய்வப் பூங்குழையா ராயத்
தொகுதி புடைபெயர்ந்து சூழ்வாள்—மிகுதே

189. னிரையா வந்தரு செய்குன்றி னீங்கா
வரையா மாதரில் வாய்ப்பாள்—[1]பெருவலை

190. முத்தின்விளங்கி முளரித் தவளப்பூங்
கொத்தி லணங்கனைய கோலத்தாள்—பத்திய

191. பச்சை மரகதம் பூணிற் பணைமுலைசூழ்
கச்சை நிலமகள்போற் காட்சியாள்—நிச்சம்

192. உரக பணமணிகொண் டொப்பிக்கி லொப்பில்
வரகமலை யன்ன வனப்பாள்—நரபதி

193. [2]மைமுகில் வண்ணத்து வானவன் மீனவன்
[3]கைமலை மேல்வரக் கண்டதற்பின்—[4]மொய்மலர்

194. நீலமே வேய்ந்தடுக்க நீலமே பூண்டுடுக்க
நீலமே யன்றி நினையாதாள்—நீலமே

195. முன்னுடைய செங்கே ழெறிக்கு முறிக்கோலந்
தன்னுடைய மானந் தழீஇக்கொள்ளப்—பின்னர்

196. நெருங்கு கழுநீரு நீலோற் பலமு
மொருங்கு மலர்தட மொத்து—மருங்கே

197. இறங்கிய கற்பக வல்லியு மேறி
யுறங்கிய தும்பியு மொத்தும்—பிறங்கு

198. வயங்கு [5]தளரின் மலங்கொம்பர் பூக்கொண்
டியங்கு [6]கருவளை யொத்துந்—தயங்குவாள்

199. கோலத்தால் மௌலிக் குலோத்துங்க சோழற்கு
ஞாலத்தா ரெல்லார்க்கு [7]நாயகற்குஞ்—சீலத்தாற்

200. காசுங் கலாபமு மேகலையுங் காஞ்சியுந்
தூசுந் துகிலுந் தொடியு[8]நாண்—கூசேன்

201. வெளியே தருவேன் விரையாருந் தொங்கல்
கிளியே தருவே கிளியே—யளியேனீ

---

[1]பெருவிலை. [2]மைம்முகில். [3]கைம்மலை. [4]மொய்ம்மலர். [5]தளிரின் மலர்க் கொம்பர். [6]கருவிளை. [7]நாயகற்குச். [8]நாண்.

202. தாது கடிகமழ் தாதகி தாமத்தின்
போது கொழுதப் புறப்பட்டாய்—ஓதிமமே

203. எங்கள் பெருமானை யிங்கே தரவாநீ
யுங்கள் பெருமா னுழைச்செல்லாய்—பைங்கழற்காற்

204. சேவை நினைந்தேகி ...ம்முடைய சேக்கையான்
சாயன் மயிலே தலைப்பட்டாய்—பாயுங்

205. கடமானே போலவற்கு நீநின்னைக் காட்டின்
மடமானே தானே வருங்காண்—கடிதென்று

206. கொள்ளைகொள் காமன் கொடும்பகைக்குக் கூசித்தன்
பிள்ளைக ளோடிருந்து பேசுவாள்—உள்ள

207. .... ... ....லகில குல நீலரத்தி னுபரணம்
விலக வெயிலை விலக்க—வலகிற்

208. பெரிய பெருமான் பெரும்பவனி வீதி
விரிய வெதிரே ெ....ழுந்தாள்—வரிவளை

209. ஆயத்தா ரென்னில் அளியத்தா ரெல்லோரும்
நேயத்தா ரல்ல....ே.... நிற்பரே—தேயத்தார்

210. மன்னனை யஞ்சாதே வாரணத்தை யஞ்சாதே
மின்னனை யாளை ......மீளுரா—முன்னர்

211. தடமாகுந் தெய்வக் களிறு விரும்பும்
இடமாகும் யாமென்பார் போலப்—படமா

212. யிரைப்பச் சுருளோ டிருளளக பாரம்
நிரைப்ப வனமாகி நிற்பார்—விரைப்பூண்

213. முலையாய் வளரு முரட்குவடு கொண்டு
மலையா நெருங்க வருவார்—தொலையாத

214. பாய வருமுத்த மாலை பலதூக்கித்
தூய வருவியாத் [1]தோன்றுவாள்—சாயற்

215. கொடியா யடிசுற்றிக் கொள்வார் புரக்கும்
பிடியாய் நறுந்துகள் பெய்வார்—விடுதுமோ

[1]தோன்றுவார்.

216. [1]யாழா மிடற்றால் வளைக்குதும் யாமென்பார்
[2]தோளாய் வளைத்தெங்குஞ் சூழ்போவார்—[3]ஆழைக்கைத்

217. தியாகனை மானதனைத் திக்கானை யெட்டுக்கும்
பாகனை.... சென்று பற்றுவார்—தோகையை

218. நற்றுகில் கொண்ட நறுந்துழாய் மார்பாநின்
பொற்றுகில் தந்தருளிப் போகென்பார்—மற்றிவள்

219. தன்சங்கங் கொண்ட தடந்தா மரைக்கண்ணா
நின்சங்கந் தந்தருள நேயென்பார்—முன்கொள்ளும்

220. இன்றுயிர்க் கெல்லா மெறியாற் கடற்கொள்ளு
நின்றுயில் தந்தருள்வாய் நீயென்பார்—[4]ஒன்றொன்று

221. மானு மயிலு மனையார் வளைத திளைப்பத்
தானுங் களிறுந் தடையுண்ட—கோனுந்

222. தடுத்த கொடிக்குத் தசமடங்கு வேட்கை
யடுத்த திருநோக் கருளிக்—கொடுத்த

223. திருநகை மூரல் திகழ்ந்தா னணங்கும்
ஒருநகை கூர்ந்தொருகா லுய்ந்தாள்—பெருநகை

224. யெய்தி யனங்க னெழப்போனான் மாதரும்
[5]உய்து சிறந்தா ருழைச் சென்றாள்—[6]நொய்திற்

225. [7]கூசினார் [8]சாந்தும் பனிநீர் குழைத்திழைத்துப்
பூசினா ராவி பொழிந்தொழிந்தார்—வீசினார்

226. இட்டார் நிலவி விளக்தென்ற லுங்கொணர்ந்து
சுட்டார் குளிரி தொடுத்தெடுத்தார்—விட்டாரோ

227. பள்ள மதனிற் படரும் பெரும்புனல்போல்
உள்ள வுயிரை யுடன்கொண்டு—வள்ளல்பின்

228. ஓதை மறுகில் உடன்போன போக்காலிப்
பேதை நடுவே பிழைத்தொழிந்தாள்—மாதரில்

[தொடரும்.]

---

[1]யாழால். [2]தோளால். [3]ஆழிக்கைத். [4]என்றென்று. [5]உய்தி. [6]நொய்தினிற். [7]225 முதல் 240 முடியவுள்ள கண்ணிகள், விக்கிரமசோழனுலாவிலும் 224 முதல் 239 வரையுள்ள கண்ணிகளாகக்காணப்படுகின்றன. [8]சாந்து பனிநீர்.

# புரூரவசரிதை

[௯௪0-ம் பக்கத்தொடர்ச்சி].

## மக்கள்சேர்படலம்.

குருமாமதியீண்டுதயங்கொடுகுற்றநீங்கி
வருநாடொறுமெய்வளர்வுற்றுவனப்புவாய்ந்து
பெருமாநிலத்தெய்து நல்போன்றதொர்பெற்றிமிக்கா
ரொருநாளினிற்கும்பனுக்கிம்மொழியோதுகின்றார். (௧)

அந்தாமரையோனெமதையனையாற்றொழுக்கித்
தந்தானுனைநீயெமைத்தந்தனையாநலாலே
யெந்தாயுனக்கீகுவம்யாங்களும்யாவருக்கும்
சிந்தாவிறன்மன்னரைத்தந்தனமென்னுஞ்சீர்த்தி. (௨)

வெறிக்குங்குமத்தோள்வலியாதியமேன்மைகாணி
லெறிக்கும்புதுவெண்ணிலவென்னவிருத்தலென்னும்
குறிக்கொண்டொருமன்னரிற்சேவகங்கூட்டுகென்ன
மறிக்கொண்டகுலப்பெருந்தாதைவழங்குவானல். (௩)

பொன்னில்லெனவென்றுகொல்பூண்டனமின்மைதானே
வுன்னில்லெனமாறியவின்மையென்றோர்ந்தவாறே
பின்னில்லெனவொன்றுளயான்செயப்பெற்றிடீரோ
வென்னில்லெனவெண்ணியெனைத்தவிர்ந்தேகுமாறே. (௪)

வழிநின்றபெரும்பதங்காட்டிடமக்களென்னும்
விழியின்றிவருந்தியவெற்கிருமெய்க்கணாகிப்
பழியின்றுறைநீக்கிடுவீரெனைப்பற்றுநீங்கிக்
கழிகின்றனமைந்தரில்மீளவுங்காட்டலென்றே. (௫)

நங்கேதமகற்றியநீவிரிந்நாடுநீங்கிச்
செங்கேதனமன்னவர்யாரெனத்தேர்ந்துநேயத்
தெங்கேகுதிரெவ்விடைவைகுதிரெண்ணில்யானும்
அங்கேகுவனீங்கலனுங்களையென்னவன்னோர். (௬)

உன்னையுளதாகியமைந்தர்கள்யாங்களுன்னைப்
பன்னாளிடைநீங்கிடநெஞ்சுபதைத்திடாதோ
வின்னாறுபுயத்திறன்மன்னனைமேவிமீட்டுஞ்
சின்னாளிடையெய்துது நீமனத்தின்னல்தீர்தி. (௭)

என்றங்கவர்கூறிடக்கும்பனியம்புவானீர்
மன்றும்பொதுநீக்கியமன்னவர்மைந்தர்போலாங்
கன்றுஞ்சினவாளரிகட்டினினிற்குமன்றோ
சென்றின்பமொடுற்றவண்மேவுதிர்செல்கவென்றே. (௮)

ஒளித்தாமரையிற்கதிர்வாண்முதலுற்றயாவும்
நளித்தாமவடம்பணிதூசொடுநெக்கசெம்பொ
னளித்தாமவேட்கன்புறமார்பகம்புல்லிநும்பேர்
விளித்தாறுவதென்றுகொலோவெனவெம்பிவிட்டான். (௯)

இருமைந்தருமன்னபிதாவினிருக்கையான
வொருமந்தரநின்றிருசீயமுதிப்பதென்னத்
தருமந்தழையத்தறுகட்கலிதாழ்ந்துசாய
வருமந்தபதங்கள்பதந்தொடவாங்கெழுந்தார். (௧0)

வாளார்த்தனர்கச்சுவிசித்தமருங்கினோர்பால்
தோளார்த்தனராங்கதம்வெங்கணைப்புட்டிறாக்கித்
தாளார்த்தகுணப்பெருஞ்செஞ்சிலைதாங்கிவேக
மூளாக்களிறுமெனப்பின்னெறிமுன்னடந்தார். (௧௧)

முல்லைக்குழலாம்பன்மொழிச்சியர்முல்லைநீங்கிச்
செல்லைத்தடவும்பொழினாட்டகத்தெல்லைதீர்ந்து
தொல்லைக்கிரியும்வனமும்புறஞ்சூழ்ந்தயாறும்
வில்லைப்பயில்வோர்கடந்தேபிறநாடுமேவி. (௧௨)

புள்ளுங்கயலும்பயிலும்புனனாட்டினீடூ
ருள்ளும்புறமுமுதலாயினவூர்கடோறுந்
தெள்ளுந்திறன்மேவியவீரரைச்சேவகங்கள்
கொள்ளுந்திறன்மன்னரைநாடினர்கொற்றமிக்கார். (௧௩)

தூநக்கவேலார்வினவுஞ்செயல்சூழ்ந்ததக்கோர்
வானத்தலையாகியகங்கைமருங்கினோர்பாற்

பேனக்கடனீருலகுக்குலகாம்பிராதிட்
டானத்தொருவனுளனுங்குறுமென்றறைந்தார். (௧௪)

அம்மூதறிவோர்கண்மொழிந்தமையாய்ந்துணர்ந்து
செம்மூரியவில்லியர்நன்றெனச்சிந்தைதேர்ந்து
தம்மூரெனுமன்புதனித்தனிமுன்புதாழ
மும்மூதெயில்சூழ்தருமங்நகர்முன்னினரால். (௧௫)

கண்ணுற்றனர்கண்மலர்கண்மலர்க்காவுநாடும்
புண்ணுற்றிடமாதிரந்தோய்சிகரிப்பொருப்பு
மண்ணுற்றொளிர்மாமதிலும்புனைமாடகோடி
யெண்ணுற்றனயாவையுங்கண்டுகண்டின்பமுற்றார். (௧௬)

துளையாடியகைக்கரிதேர்துரகங்களோடும்
இளையாதபடைக்கைபயிற்றிளையார்களோடும்
வளையாநெறிதேருமமைச்சர்கண்மைந்தர்தாமும்
விளையாடுமிடங்களுங்கண்டனர்வில்லின்வல்லார். (௧௭)

கறைகொண்டமதக்கரிவாம்பரிகாசுதூசு
நிறைகொண்டநிதிக்குவையாகியயாவுநேர்ந்து
குறைகொண்டிடல்கொள்ளுதியென்றுகைகூப்பிமன்னர்
திறைகொண்டிடுமாடமணிவாசலினூடுசென்றார். (௧௮)

மாட்சிக்குணமும்வலியும்பொறைவாய்மைதானு
மீட்சிக்கிலதாநெறியுங்கொடைதானுமிக்காய்ச்
சூட்சித்துணையோரவையுங்கடுஞ்சொல்லுமின்றிக்
காட்சிக்கெளிதாகியமன்னனைச்சென்றுகண்டார். (௧௯)

பஞ்சானனமும்புலியும்வருபான்மைபோன்ற
வஞ்சாவிறல்வீரரைக்கண்டிவரார்கொலென்றே
நெஞ்சாரவயிர்த்திவட்கூவுதிரென்னநின்றோர்
செஞ்சேவகரிற்சொலமன்னவன்முன்புசென்றார். (௨௦)

சென்றார்தமிலக்கணம்யாவையுஞ்சிந்தையாலே
யொன்றாகவுணர்ந்திவர்மன்னர்குலத்தினுள்ளா
ரென்றாகுதல்வேண்டுமெனத்தெரிந்தின்சொலீந்து
வன்றாட்சிலையீரிவணெய்தியவாறென்னென்றான். (௨௧)

வேறு.

மன்றலந்தொடைமன்னவகேட்டியிவ்வலியோன்
தன்றனிப்பெருந்தோள்வலித்தருக்கினிற்சமைந்த
வென்றிவேந்தரிற்சேவகம்பெறவரும்வேட்கை
யென்றனன்கனகாங்கதப்பெயருடையிளையோன். (௨௨)

கேட்டமன்னவனிப்பெருவிறலினர்கிட்டி
னாட்டமென்னினுங்கொடுத்திவட்கோடலேநலமென்
றீட்டுமந்திரத்தாலுணர்ந்தவர்தமையெமது
மாட்டிருத்திர்கொலோவெனநன்றெனவதிந்தார். (௨௩)

வதியும்வீரரைமன்னவன்பின்னருநோக்கி
யெதுகொனுங்குலம்யாதுநும்பெயரெனவினவப்
பொதுவர்தங்குலப்புதல்வர்கள்யாம்பெயர்புகலில்
கதிர்கொள்வேலினாயிரட்டையரெனக்கழறினரால். (௨௪)

யாவரென்னினுமாகுகவிவர்திறனெல்லாம்
சேவகத்தினிற்றெரிந்திடப்பெறுமெனவிருந்தான்
காவன்மன்னனையிருவருமொருகணப்பொழுது
மோவகிற்றிலாச்சாயைபோலுவந்தனருறைந்தே. (௨௫)

வேறு.

ஈங்குற்றிடுதன்மையியம்பினமுன்
வாங்குற்றதிரைக்கடல்வாய்வணிகன்
சோங்கிற்றுயரோடொருதோணியமர்ந்
தாங்குற்றவடன்மையினைப்புகல்வாம். (௨௬)

மக்கள்சேர்படலம் முற்றும்.

[தொடரும்]

உதவிப்பத்திராதிபர்.

# மதிப்புரை.

திருக்குறளின் திரட்டும், தெளிபொருள் வசனமும் :—இது, செந்தமிழ்ப்புலமை நிரம்பிய திருவாளர் மு. ரா. அருணாசலக்கவிராயரவர்களால், திருக்குறளதிகாரங்கள்தோறும் தெளிவுபெறச்சிறந்த பொருள்களையுணர்த்தும் சிற்சில குறள்களை ஆராய்ந்து திரட்டிச்சேர்த்து அவற்றிற்கு உரையும் குறிப்பும் வேண்டுமளவு சுருக்கமும் விளக்கமும் பொருந்தச் செந்தமிழ்நடையில் நன்குயெழுதப்பட்டிருக்கிறது. இவர்

கள் இதற்குமுன்பு எழுதிவெளியிட்ட திருக்குறள் வசனத்தினும் படிப்பவர்களுக்கு இது பெரிதும் பயன்படத்தக்கது. கல்வியுணர்ச்சி யில்லாதவரும் எளிதிற்படித் துணர்ந்துகொள்ளும்படி உரைநடைகளை இயலுமளவும் இயற்சொற்களாலெழுதியிருப்பது பாராட்டத்தக்கது. இப்புத்தகத்தை நெஞ்சமே நிலைக்களமாகவைத்து ஒழிவுள்ளபொழு தெல்லாம் எடுத்துப்படித்தற்கேற்றவாறு மெய்யுறைப்பைக்குளடங்கும் படி குறுகியொடுங்கிய வடிவில் அமைத்திருப்பதும் குறளுக்குப் பொருத்தமுடையதே. இவர்கள் யாக்கைதளர்ந்த முதுமைப்பருவத்தி லும் அறிவுதளராது தமிழ்க்குழைத்துவருவதுபற்றித் தமிழ்மக்கள் மிகவும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இதன் விலை ரூபா ஒன்று. வேண்டுவோர், மதுரை புத்தகவியாபாரம் பி. நா. சிதம் பரமுதலியாரவர்களிடத்திற் பெறலாம்.

திருநாவுக்கரசர்:—இது, சென்னை பாடசாலை இன்ஸ்பெக்டர் ஆபீஸ் ஹெட்கிளர்க்காக இருந்த தமிழறிஞரான திருவாளர் சே. சிவ ஞானம்பிள்ளையவர்களால் எழுதப்பெற்றது. சைவசமயகுரவருள் ஒருவரான திருநாவுக்கரசர்வரலாற்றை அச்சமயசம்பிரதாய முறைப் படி தெளிவாய் அறிவிக்கவல்லது. கலாசாலையிற்பயிலும் மாணவர்க்கு மிகவும் பயன்படத்தக்கது. இடையிடையே செய்யுட்டொடர்களமைந்த சிறந்த நடையுடைமையால், கற்பவர்களுக்குச் சொற்பொருளுணர்வை யும் அவ்வரலாற்றுணர்வோடு ஒருங்கு உண்டாக்கவல்லது. இதில், அநுபந்தம், பெரியபுராணவரலாறு, ஆராய்ச்சிக்குறிப்பு முதலியனவும் சேர்க்கப்பட்டுள்ளன. இவை, இதனைக்கறகும் மாணவர்கள் வாகீசர் வரலாற்றையொட்டியுணரவேண்டிய பிறவிடயங்களையும் ஆசிரியரிடங் கேளாமல் தாமே எளிதிற் படித்தறிந்துகொள்ளத்தக்கனவாக அமைக்கப் பெற்றுள்ளன. ஆராய்ச்சிக்குறிப்பில் திருமுறை முதலியவற்றைப் பலமுறை பயின்றறியவேண்டியவிடயங்கள்பலவும் எளிதிலுணருமாறு விளக்கப்பட்டுள்ளன. சென்னைப்புத்தகவியாபாரம் ஸ்ரீ குமாரசாமிநாயுடு கம்பெனியார் இத்தகைய புத்தகங்களை எழுதுவோர்க்கு ஊக்கமுண் டாகுமாறு ஆதரித்து அச்சிட்டுதவிவருவது பாராட்டத்தக்கது. இதன் விலை அணா பன்னிரண்டு.

குமாரசுவாமிப்புலவர்சரித்திரம்:—நமது செந்தமிழ்வாயிலாக அது தொடங்கிய நாண்முதல் அதன் இருபதாந்தொகுதிவரை தமது

அரியபெரிய பல பொருளுரைகளால், தமிழகத்தை மகிழ்வூட்டிவந்த புலவர்திலகராகிய யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்களைக் கற்றோரெல்லாம் நன்கறிவர். இப்புலவரது சரித்திரத்தை இவரது மாணவருளொருவரும், புலவருமான புன்னாலைக் கட்டுவன் ஸ்ரீமத். சி. கணேசையரவர்கள், முறைப்படத்தொகுத்து எல்லோருமுணருமாறு இனிய உரைநடையில் அழகாக அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள் இதில், பிள்ளையவர்கள் சரிதத்துடன் அவர்களியற்றியனவும் எழுதியனவும பதிததனவுமான நூலுரை முதலியவற்றைப்பற்றிய குறிப்புக்களும், பிள்ளையவர்கள் பரகதியடைந்த பிரிவாற்றாது புலவர்பலரும் இரங்கிப்பாடிய பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் விலை ரூபா. ஒன்று. வேண்டுவோர் ஸ்ரீமத். சி. கணேசையரவர்களிடத்திற் பெறலாம்.

---

# அநுதாபக்குறிப்பு.

நம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினருள் ஒருவரும், சிறந்த தமிழறிவாளரும், சென்னைச் சட்டசபைத் தலைவரும் ஆன திருவாளர் எல் டி. சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் (M.A., B L, L.L B.) நாளிது குரோதனஹூ ஆவணிமீ ௨௬௳ இவ் வுலகவாழ்க்கையைத் துறந்தார்களென்றறிந்து மிக வருந்துகின்றோம். இவர் ஆங்கிலம், ஜர்மன், லத்தீன், தமிழ் முதலிய பதினொன்றுபாஷைகள் அறிந்தவர். தமிழிலக்கணங்களுட் டலைசிறந்த ஒல்காப்பெரும்புகழ்த் தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர். கணிதசாத்திரத்திலும் வானசாத்திரத்திலும் மிக வல்லவர். சிலப்பதிகாரம் முதலிய பல பழந்தமிழ்நூல்களின்காலத்தை ஆராய்ந்து ஆங்கிலத்தில் உரைநடைகள்எழுதியவர். நம் சங்கத்தின் பதினொன்காம் ஆண்டுத்திருவிழாவிற் றலைமைவகித்து அதனைச் சிறப்புற நடத்திவைத்தவர். கூட்டுறவிலாகாவிற் றலைவராயிருந்து கூட்டுறவுச்சங்கங்கள் நன்கு தழையப் பல்லாற்றானும் முயன்றவர். அரசாங்கத்தாராலும், கல்வியறிவாராய்ச்சியுடையாராலும் நன்குமதிக்கப் பெற்றவர். சாந்தம், பொறுமை முதலிய சிறந்தகுணங்கள் பலவும் ஒருங்கமையப்பெற்றவர். இத்தகைய பிள்ளையவர்களை யிழந்து வருந்தும் அவருடைய நன்மக்களுக்கு நமது அநுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

பத்திராதிபர்.

---

புள்வேளூர்ப்பூதன் வரகரிசிச்சோறிட்டபோது ஔவையார் பாடிய வெண்பா.

991. வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரவென் றேபுளித்த மோரும்—பரிவுடனே
புள்வேளூர்ப் பூதன் புகழ்புரிந் திட்டசோ
றெல்லா வுலகும் பெறும்.

992. காலையும் வந்த [1]கலைஞர் கதிர்கரந்த
மாலையும் வாராதே யென்செய்வார்—நீலம்
புனிற்று நிரைமேயும் புள்வேளூர்ப் பூதா
கனிற்றுகா ணம்மறையோர் கை.

பெருந்தலைச்சாத்தனூர் தம்பியால் நாடுகொள்ளப்பட்டுக் காடுபற்றியிருந்த குமணனைப் பாடியது.

993. ஆறு பெருக்கற் றருந்திடர்தான் பட்டாலும்
ஊறலமை யாதோ வுலகாற்றத்—தேற
வறியைநீ யானு மென்கலியை மாற்றச்
சிறியையோ சீர்க்குமணா செப்பு.

கள்ளி - ஆளி.

994. சில்செவி யன்னே பெருங்கேள் வியனே
குறுங்கண் ணினனே நெடுங்காட் சியனே
இளைய னாயினு மறிவின் மூத் தனனே
மகளி ரூடினும் பொய்யறி யலனே
கீழோர் கீழ்மை செய்யினுந் தான்றன்
வாய்மை வழுக்க முறுத லஞ்சி
மேனெறி படரும் பேரா ளன்னே
ஈண்டுநலந் தருதல் வேண்டிப் பாண்டியர்
பாடுதமிழ் வளர்த்த கூடலின் வடாஅது
பல்குடி துவன்றிய கள்ளியம் பெரும்பதிச்
சால்பு மேன்மேற் றோன்றிய வாளி
காதலின் மேவலன் பிறர்பிறர்க் கீயும்
தானு முண்ணும் விருந்துண்டு மிகினே.

(991) தமிழ்நா. 22. (992) வீரசோ. அலங். 9 மேற். [1]கவைஞர். (993) தமிழ்நா. 13. (994) ஆசிரியமாலை (புறத்திரட்டு)

### மதுரையிற் பிட்டுவாணிச்சிமகற்கு மங்கலக்குறிப்பாற் சான்றோர் கூறியது.

995. அன்று யிவனொருவ னந்தரத்தா னென்றான்
முன்ன மொருகான் மொழியினான்—பின்னுங்
கலிகெழு கூடலிற் [1]கண்ணீடி வந்து
புலியாய்ப் பொருவான் புகும்.

### சேந்தன்.

996. இன்னமிழ்த மூட்டி யெழில்வளைசேர் முன்கைக்கொண்
டென்னையர்பேர் சொல்லென் றிரந்தானுந்—தென்னயம்பை
செஞ்சுடர்வாள் வெஞ்சினவேற் சீர்ச்சேந்த னென்னுமால்
கிஞ்சுகவா யஞ்சொற் கிளி.

### பூதன்.
(கடவுள் மானிடப்பெண்டிரை நயந்தபக்கம்.)

997. குடுமிப் பருவத்தே கோதை புனைந்தே
[2]இடுமுத்தப் பூத னிருப்பப்—படுமுத்தம்
புன்னை யரும்பும் புகாஅர்ப் புறம்பணையார்க்
கென்ன முறைய ளிவள்.

### காளிம்பன்.

998. விடஞ்சூ ழரவி னிடைநுடங்க [3]வில்வாள் வீசி விரையார்வேங்
கடஞ்சூழ் நாடன் [4]காளிம்பன் கதிர்வேல்பாடு மாதங்கி
வடஞ்சூழ் கொங்கை மலைதாந்தாம் வடிக்கணீல மலர்தாந்தாம்
தடந்தோ ளிரண்டும் வேய்தாந்தா மென்னுந்தன்கைத் தண்ணு
[மையே.

### [5]மச்சத்தார்கோ.

999. ஒற்றை யலவ னுழுத வரப்பருகே
முற்றி யெழுந்த முடத்தாழை—மற்றவ்
வயலே கனியுதிர்க்கு [5]மச்சத்தார் கோமாற்
கயலே பிறவே யவா.

1000. அரிகுருகு தின்ற கனிகிடப்ப வாங்கே
வரியலவன் வாயில்வா னீட்டி—நரிதனது

---

995. தொல். பொரு 84 நச். [1]கண்ணுடி. (996) யாப். வி. 94. (997) தொல். பொரு. 83. நச். [2]இடுமுத்தம். (998) யாப். வி. 77; யாப். கா. செய். 5 உரை; தொண்டை. சத. 14. [3]மின்வாள், மினல்வாள். [4]காளிங்கன். [5]வச்சத்தார். (999—1000) தஞ்சைச் சரச்சுவதிமால் - பிரதி. (வச்சத் தொள்ளாயிரத்தைச்சேர்ந்தபாடல்கள்போலும்.)

வால்வாங்க மாட்டாத [1]மச்சத்தார் கோமானென்
மால்வாங்க வல்லனோ வந்து.

1001. அவற்பதத்த செந்நெ லருந்தி யருகே
துவர்ப்பதத்த செங்கிடையுந் துய்த்துக்—கவர்ப்பதத்த
மாமேதி மேய்ந்துவரு [1]மச்சத்தார் கோமானுக்
கியாமே திலமே திலம்.

அச்சுதகளப்பாளன் தளையிட்டபோது மூவேந்தர் பாடியவை.

(சேரன்)

1002. தினைவிளைத்தார் முற்றந் தினையுணங்குஞ் செந்நெல்
தனைவிளைத்தார் முற்றமது தானும்—கனைசீர்
முரசுணங்கச் சங்குணங்கு மூரித்தேர்த் தானை
அரசுணங்கு மச்சுதன்முற் றத்து.

(சோழன்)

1003. [2]அரசர் குலதிலக னச்சுதன்முற் றத்தில்
அரச ரவதரித்த வந்நாள்—முரசதிரக்
கொட்டிவிடு மோசையினுங் கோவேந்தர் காற்றளையை
வெட்டிவிடு மோசை மிகும்.

(பாண்டியன்)

1004. குறையுளா ரெங்கிரார் கூர்வே விராமன்
நிறையறு திங்க ளிருந்தான்—முறைமையால்
ஆலிக்குந் [3]தானை யலங்குதா ரச்சுதமுன்
வாலிக் கிளையான் வரை.

'இது பாடியபின்பு ஒருவிலங்கு கூடப்போட்டபின்
பாண்டியன் பாடியது.'

1005. குடகர் குணகடலென் றார்த்தார் குடகர்க்
கிடகர் வடகடலென் றார்த்தார்—வடகடலர்
தென்கட லென்றார்த்தார் [4]தில்லையச்சு தானந்தன்
முன்கடைநின் றார்க்கு முரசு.

---

(1001) தஞ்சைச் சரச்சுவதிமால்-பிரதி. [1]வச்சத்தார் (? (1002—5) தமிழ்நா. 154—7. [2]அரச னகளங்கன். [3]தார்மாலை யச்சுதா முன்னமொரு. [4]தென் றில்லையச்சு தானந்த.

## களப்பாளன் வெற்றிச்சிறப்பு.

1006. படுபெருந்துஞ் சூர்ப்பேயும் பல்விலங்கு நாயும்
கொடியுங் கழுகுமிவை கூடி—வடிவுடைய
கோமான் களப்பாளன் கொல்யானை போமாறு
போமாறு போமாறு போம்.

## மதுரைவீரகஞ்சுகன் சுந்தரன்.

1007. காவிரித் துறைப்படிந்து பொருநையைக் கலக்கியே
கடைக்கணங்கி கொண்டுறந்த கனல்கொளுத்து மாணையா
வாவுகொற்ற மாவுகைத்து வஞ்சிவென்ற சுந்தரன் [ன்
மதுரைவீர கஞ்சுகன் வரைப்புறத்து மாதரீர்
பாவையர்க்கு வாடைவே றெனக்குவேறு வாடையோ
பாயன்மற் றவர்க்குவே றெனக்குவேறு பாயலோ
யாவருக்கு மதியம்வே றெனக்குவேறு மதியமோ
யானொருத்தி பெண்பிறந் திரண்டுபட்ட துலகமே.

1008. திக்கயங்க ளெட்டுமுட்ட வைத்தபுட் பதாகையான்
செழியர்சேரர் வளவர்வந்து திறையளக்கு முன்றிலான்
மைக்கருங்கண் மாதரார் மனங்கவர்ந்த மாரவேள்
மதுரைவீர கஞ்சுகன் மணந்துதந்த காதனோய்
கைக்குவந் தகப்படாது கண்முனிற்கு மொருவராற்
காணொணாது காணுமென்று காட்டொணாத தன்றியும்
ஒக்குமென் றுரைக்கலான வுவமையில்லை யிருவரும்
உள்ளறிந்த தன்றிமற்றிவ் வூரறிந்த தில்லையே.

1009. மலைந்த மன்னவர்கள் வானி லேறவடி
வாள்வி திர்த்தருளில் சுந்தரன்
வாகை கொண்டபர ராச கேசரிநன்
மதுரை யங்குரிசில் பின்புபோய்
உலைந்து லைந்துவிளை யாடு கின்றவுனை
வந்தெ டுத்தரிய தாயர்பால்
உங்க ளையரை யழைத்தி ரேகென
உரைத்த மாதவரொ டென்சொனாய்

---

(1006) தொண்டை. சத. 69 உரை.

அலைந்த லைந்துகவிழ் குழலுமக் குழலி
னள்ளி யிட்டசிறு புழுதியும்
அமுத மூறுகனி வாயு மந்தவமு
தருவி யாமொழுகு பண்டியும்
கலைந்த செம்பொன்வளை யும்பிசைந்திரு
கருங்கண் மைபடு புறங்கையுங்
கழன்று தொங்குமரை ஞாணு மாகவரு
காதலா சிறிய கள்வனே.

1010. பாக சாதன கிரீட கோடிபொடி
படவெ றிந்தகொடி மீனவன்
படவி லேறியெழ வாசி யேறியெழு
பார்பு ரக்குமுகில் சுந்தரன்
தியாக தாருவென நாவ லர்க்குதவு
செங்கை யானரச ராகவன்
திசைதொ றுந்தரள மணிகொ ழித்துவரு
திருவை யைத்துறையி லன்னமே
மாகம் வேகவரு திங்க ளாலிளைய
தென்ற லான்முதிய வன்றிலால்
வாடை யாலவனி யாடை யாலயல்சொல்
வம்பி னான்மதன னம்பினால்
ஆக மேதுபடு நெஞ்ச மேதுபடும்
ஆசை யேதுபடு நிலையிலா
அமளி யேதுபடு நாண மேதுபடும்
அந்தி மாலைபடு நேரமே.

1011. சந்த னுடைவி மலைப்பி றந்ததமிழ்
சங்கம் வீறிவளர் கூடலான்
தாறு கொன்றுமிழல் சீறி நின்றுகடை
சாய்த்தெ றிந்தகளி யானையான்
மந்த ராசல மெடுத்து வாசுகி
பிணித்து வாருதி கடைந்தமால்
வாகை வாகுபுனை சுந்தரன் குவளை
மாலை கேட்டபின் மடந்தைமீர்

அந்தி மாலைதனி வந்து போர்செயும்
அனங்க வேள்பகழி வெள்ளமோ
ஆவி சோரமட நாண்வரம் பழிய
ஆசை கொண்டபெரு வெள்ளமோ
இந்த வானிலவின் வெள்ள மோமகளி
ரேசு கின்றபெரு வெள்ளமோ
இருகண் மாரிபொழி வெள்ள மோவுலகி
லெங்கும் வெள்ளமிக வானதே.

**முத்தரையன்—மாறன்.**

(அழுந்தூர்ப்போர்)

1012. வெங்கட் பொருகயல்சேர் வெல்கொடியோன் வாண்மாறன்
செங்கட் கரும்பகடு சென்றுழக்க—அங்குலந்தார்
தேரழுந்தி மாவழுந்தச் செங்குருதி மண்பரந்த
ஊரழுந்தி யூரென்னு மூர்.

**பாச்சில்வேள் நம்பன் பாடியது.**

(மணலூர்ப்போர்)

1013. [ஒழுகு குருதி யுடனுப்ப] வோடிக்
கழுகு கொழுங்குடர் கவ்வ—விழிகட்பேய்
புண்ணளைந்து கையும்பப் போர்மணலூர் வென்றதே
மண்ணளைந்த சீர்மாறன் வாள்.

(கொடும்பாளூர்ப்போர்.)

1014. [வஞ்சிப்பூச் சூடிய] வாளமருள் வாகைப்பூக்
குஞ்சி கமழ்கண்ணிக் கோமாறன்—தஞ்சைக்கோன்
கோளாளி மொய்ம்பிற் கொடும்பாளூர் காய்ந்தெறிந்தான்
தோளா லுலகளிக்குந் தோள்.

**கிழார்க்கூற்றத்துப் பவதாயமங்கலத்து அயருணிலை ஆயினை துலாலங் காஞ்சன் பாடியது.**

1015. ஏறி விசும்பு மிருநிலமாய்த் தென்பவால்
மாறன் செருவேன் மறங்கனன்று—சீறக்

(1012—15.) செந்தலைச்சாஸனப்பாடல்கள்; [ ] இவ்விருதலைப்பகரங்கட்கு உட்பட்ட எழுத்துக்கள், சிதைந்தவிடத்தை நிரப்ப ஊகித்தமைக்கப் பட்டனவாகும். (செந்தமிழ், தொ. 6, பக். 12—17.)

கொடிமாடத் தண்கொடும்பைக் கூடாத மன்னர்
நெடுமா மதிலிடிந்த நீறு

1016. [அல்லிற் பிரிந்தார்க்கே யல்லையாய்க்] காலந்தான்
முல்லைக்கே முற்படுமோ வென்றென்று—வல்லக்கோன்
காரைவாய்ப் போர்வென்ற வேன்மாறன் கைபோலுங்
காரைவாய்க் கேளேனே கண்டு.

(காந்தளூர்ப்போர்)

1017. செருவ(ல ரா) னதளூற் சிந்தியார் போலும்
மருவலராய் வாண்மாறன் சீறக்—கருவிளை
கண்டோற்ற வண்டரவங் கார்தோற்றுங் காந்தளூர்
மண்டோற்ற வேந்தர் மனம்.

(கோளூட்டுப்போர்)

1018. எண்கி னிருங்கிளையு மேறற் கரியவே
வண்கைச் செருமாறன் வாள்காய்த்தி—விண்படர்வான்
செய்நாடு தாழூர்ந்த மாநாடக் கண்ணனூர்க
கோளூடர் புக்கொளித்த குன்று.

1019. மலர்ந்ததார் வாண்மாறன் மன்னண்ணல் வாயிற்
கலந்தநாட் காணலாங் காண்க—உலந்தவர்தம்
என்பருந்து சூற்பே யிருந்துறங்க வீழ்குடர்
[பன்பருந்து] சிந்தப் பகடு.

1020. [பாமருவு கின்றயாழ்ப்] பாண்மகனே பண்டெல்லாம்
யாமறிது மெங்கையர்க்கே சொல்லுநீ—மாமங்கைத்
தென்னூடர் காதலியர் நீநாட வாய்சிவந்த
மின்னூடு வேன்மாறன் மெய்.

## சேந்தன்.

1021. எழிறரு ஞாயிற் றெழில்போ னிறைந்து
பொழிதருவான் றிங்களே போல—முழுவுலகும்
தன்புகழி னுனிறைந்த தார்வேந்தன் சேந்தன்மாட்
டென்புகழ்த லாவ தினி.

(1016—20) செந்தலைச் சாஸனப்பாடல்கள்; [ ] இவ்விருதலைப்பகரங்கட்கு உட்பட்ட எழுத்துக்கள், சிதைந்தவிடத்தை நிரப்ப ஊகித்தமைக்கப் பட்டனவாகும். (செந்தமிழ், தொ. 6, பக். 12—17.) (1021) வீரசோ, அலங். 17. மேற்.

### நாங்கூர்ச்சேந்தன்.
### (பட்டினத்தடிகள் பாட்டு).

1022. மத்தளை தயிருண்டானு மலர்மிசை யயனுந் தேடிப்
பித்தளை கின்றபோது பிரானடிக் கன்பு வைத்துச்
[1]செய்த்தலைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தனை வேந்த னிட்ட
கைத்தளை நீக்கி யிங்கே காட்டுவெண் காட்டு ளானே.

### கதக்கண்ணன்.

1023. செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போல்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே.

1024. திருந்திலைய விலங்குவேற் றிகழ்தண்டார்க் கதக்கண்ணன்
விரிந்திலங்கு [2]வெண்குடைக்கீழ் வேந்தட்ட வியன்களத்து
முரிந்திறைஞ்சி முதலுறைக்கு முடியெல்லா முறைமுறையே
[3]அருந்திறன்மா மறமன்னர்க் கழுவனவும் போன்றனவே.

### கலிமல்லன்.

1025. மண்பாய வையகத்து மாலைமாற் றீருக
வெண்பா வெழுத்து மிணையொப்ப—வொண்பாவின்
சீர்கிடப்பத் [4]தென்றமி ழாளி கலிமல்லன்
பேர்கிடப்பப் பேச லரிது.

### சனந்தாங்கி.

1026. ஆர்கலிநீர் ஞாலத் தலந்தார்கட் காற்றலாற்
காரெழிலி நாணக் கலந்ததே—சீர்சான்ற
சண்டர சண்டன் சனந்தாங்கி சங்கையார்
கண்டர [5]கண்டன்றன் கை.

### விசயன்.

1027. என்னித் பொலிந்த திவண்முக மென்றெண்ணித்
தன்னிற் [6]குறைபடுப்பான் றண்மதிய—மின்னி
விரிந்திலங்கு வெண்குடைக்கீழ்ச் செங்கோல் விசய
னெரிந்திலங்கு [7]வேலி னெழும்.

---

(1022) சோழமண்; 64. [1]செய்த்தலை வயலூர். (1023) யாப். வி. 86, 78, 15; யாப். கா; வீரசோ. யாப். 12 மேற். (1024) யாப். வி. 32; வீரசோ. யாப். 12 மேற். [2]மலிர்பைம்பூண் [3]அருந்திறல. (1025) யாப். வி. 95. [4]தென்றமி ழாலி கலிமன்னன் (1026) யாப். வி. 95. [5]கண்டன. (1027) யாப். வி. 95; இலக். வி. 887 உரை. [6]குறைபடுவான். [7]வேல்கொண்டெழும்.

### திங்களூர்த்தேவன்.

1028. திங்க ளிளங்கதிர்போற் [1]றென் திங்க ளூர்த்தேவன்
மைந்தர் சிறப்ப மகிழ்சிறந்து—திங்கட்
கலைபெற்ற கற்றைச் சடைக்கடவுள் காப்ப
நிலைபெற்று வாழியரோ நீ.

### சுவரன்மாப்பூதன்.

1029. உதுக்காண்,
சுரந்தானா வண்கைச் [2]சுவரன்மாப் பூதன்
பரந்தானாப் பல்புகழ் பாடி - யிரந்தார்மாட்
டின்மை யகல்வது போல விருணீங்க
மின்னா மளித்தேர் மழை.

### மாசேனன்.

1030. பாசிழை யாகம் பசப்பித்தான் பைந்தொடியை
மாசேன னென்று மனங்கொளீஇ—மாசேனன்
சேயிதழ்க் கண்ணி [3]தருகிலான் சேர்தியென்
னோய்தீர நெஞ்சின்மேல் வைத்து.

### கருங்கோன்.

1031. கானக நாடன் கருங்கோன் பெருமலைமேல்
ஆனை கிடந்தாற்போ லாய பெருங்கற்கள்
தாமே கிடந்தன கொல்லோ வவையேற்றிப்
பெற்றி பிறக்கிவைத் தாருளர் கொல்லோ.

### உளியன்.

1032. ஊகத்தி னான்மல்கு சோலை யுளிய னுயர்வரைவாய்
மேகத்தி னாலுமின் னாலு மிகவு [4]மெலிந்திளைத்த
ஆகத்தி னேற்கரு ளாயென் பணியுமை வாயெயிற்று
நாகத்தி னான்மால் கடைந்திடப் பட்ட நளிகடலே,

### மள்ளன் - மதிநிலை.

1033. தருமலிந்த வண்மை தலைத்தந்து மிக்க
திருமலிந்து நீதிலவே யாக—உருமலிந்த

---

(1028) தொல். பொருளதி. 422. [1]றேந்திங்க. (1029) தொல். பொருளதி. 361; யாப். வி. 94; யாப். கா. [2]சுவானமாப்பூதன், சுவர்ணமாப்பூதன், சுமானமாப்பூதன். (1030) யாப். வி. 94. [3]தருதலான். (1031) யாப். வி. 95. (1032) ஷை. 96. [4]மெலிந்துரைத்த. (1033) ஷை. 95.

என்னரசன் மள்ளன் மதிநிலே யேதிலர்கள்
துன்னரிய வஞ்சினத்தான் றேள்.

**சிலம்பன் - திருவேங்கடன்.**

(வினவுத்தரம்)

1034. பூமேலா ளாரென்பார் பூம்போர்வை யென்செய்யும்
தீமேற் படிற்கொடுத்தாற் கொள்வதெவன்—ஆமே
நலந்திகழுஞ் [1]செங்கை நயநீர னெங்கோன்
சிலம்பன் றிருவேங் [2]கடன்.

**வண்கோசன் - செருந்தை.**

(காதைகரப்பு)

1035. பல்லார்க்கு மீயும் பரிசிற் கொடைத்தடக்கை
மல்லார் மணிவரைத்தோள் வண்கோசன்—மல்லலந்தார்
செஞ்சொற் செருந்தைதன் றென்னுறந்தை யென்றுளாம்
வஞ்சிக் கொடிமருங்கின் வந்து.

**கூத்தப்பெருஞ்சேந்தன்.**

1036. கொய்தளிர்த் [3]தண்படலைக் கூத்தப் பெருஞ்சேந்தன்
வைகலு மேறும் வயக்களிறே—கைதொழுவல்
காலேக வண்ணனைக் கண்ணுறக் காணவெஞ்
சாலேகஞ் சார நட.

**கவிகண்ணன்.**

(மெய்வகை).

1037. தந்தை யிலேச்சுமடன் [4]தாய்தொழிலி தான்பார்ப்பான்
எந்தைக்கீ தெங்ஙனம் பட்டதுகொல்—முந்தை
அவியுணவி னோர்[5]தெரியின் யாவதாங் கொல்லோ
கவிகண்ண னார்தம் பிறப்பு.

**வையையர்கோ.**

(இருபுறவாழ்த்து)

1038. பண்டொருகாற்றன் பைந்தொடியைக் கோட்பட்டு
வெங்கடம் வில்லேற்றிக் கொண்டெழுந்தான்—தென்களந்தைப்

---

(1034) யாப். வி. 95; நன். 268 மயிலை. [1]செங்கோல். [2]கடம். (1035) யாப். வி. 95. (1036) தொல். சொல். 37 நச்; நன். 396 மயிலை. ஷை. சங். ந. உரை. [3]தண்டலை. (1037) யாப். வி. 95; யாப்.கா. ஒழிபி. [4]தாய்தோழி, [5]தெரியி னுவதாங். (1088) யாப். வி. 96; யாப். கா. ஒழிபி.

[1]பூமான் றிருமகளுக் கின்னும் புலம்புமால்
வாமான்றேர் வையையார் கோ.

எயினர்கோன் - கண்டன்.

1039. குலாவணங்கு வில்லெயினர் கோன்கண்டன் கோழி
நிலாவணங்கு [2]வெண்மணன்மே னின்று—புலானுணங்கல்
கொள்ளும்புட் காக்கின்ற கோவின்மையோ நீபிறர்
உள்ளம்புக் [3]கியாப்ப துரை.

குன்றையெல்லன்.

1040. ஆலெங்கே யங்கே யரும்பறவை யாற்றுயிலும்
மாலெங்கே யங்கே மலர்மடந்தை—சோலைதொறும்
செங்கே தகைமணக்குஞ் செங்குன்றை யெல்லனெங்கே
அங்கே யிரவலரெல் லாம்.

சந்திரன் என்ற வள்ளல்.

1041. ஏடலர் தார்ச்சந் திரன்ற னிருங்கொடைக்கு
நீடு மழையே நிகரென்னிற்—கோடை
மறுக்கையினும் வக்கிரக்கோ ளுள்ளுந்தாம் பெய்யா
வொறுக்கையினு மாட்டாவே யொப்பு.

கந்தகோன்.

1042. கற்பகமோ வொக்குங் கணுவில்லை காவேரி
மற்புனல்போ லாமொருகால் வற்றுறது—நற்புகழ்சேர்
நந்திகை மன்னு புலவோர் நவைதீரக்
கந்தகோன் வந்துதவுங் கை.

கற்சிறை என்னும் வள்ளல்.

1043. வண்மை மதம்பொழிந்து மாற்றார் திறல்வாடத்
திண்மை பொழிந்து திகழும்போன்ம்—ஒண்மைசார்
நற்சிறைவண் டார்க்கு நளிநீர் வயற்பம்பைக்
கற்சிறை யென்னுங் களிறு.

---

[1]பூமாண்டிருமகளுக். (1039) யாப். வி, 22; யாப். கா. ஒழிபி; வீரசோ. யாப். 19 மேற். [2]நேர்மணன்மே. [3]காப்ப. (1040) தொண்டை. சத. 40, மேற். (1041) வீரசோ. அலங். 15. மேற். (1042) ௸ 17 மேற். (1043) யாப். வி. 60.

### மயிலை - வீரன்.

1044. தளையவி ழப்புது நறைவிரி யப்பொழில் தடமலி துறைமாடே
வளைபொழி நித்திலம் வளர்நில வைத்தரு மயிலையி லெழுகாரே
அளவி யழற்சிலை மழைபொழி யச்செயு மடறிகழ் புயவீரா
இளைய மடக்கொடி யிடரொழி யப்புனை மலரித ழருளாயே.

### சங்கபாலன்.

1045. வண்டிவரு மலர்வெட்சி மாலை மார்பன்
மால்வேண்ட மண்ணளித்த மலிதோள் வள்ளல்
ஞண்டிவருந் தண்படப்பை ஞாழன் மூதூர்
நரபதிக்கு வான்கொடுத்த நகைவே னந்தி
தண்டிவருந் தடவரைத்தோட் சயந்தன் வாடச்
சதுமுகனைச் சயஞ்செய்த சங்க பாலன்
தெண்டிரைவாய்த் திருமகளோ டமிர்தங் கொண்டான்
சீர்பரவச் சென்றதலுஞ் செல்ல ருனே.

### மாந்தைத்தியாகி.

1046. மாந்தையிலே வாழு மகுடத் தியாகியுனக்
கேந்து தழும்போ விரண்டுண்டு—வேந்தர்
'முடித்தழும்புன் காலிலே முத்தமிழோர்க் கீயும்
படித்தழும்புன் கையிலே பார்.

### வீதிவிடங்கன்—கம்பன்.

1047. "கங்குற், குழம்புபடு பேரிருட் பிழம்புபட வுருட்டிய
செஞ்சுடர் மௌலி வெஞ்சுடர் வானவன்
வழிமுதல் வந்த மகிபதி வழிமுதல்
அதிபதி நரபதி அசுவபதி...
கசபதி கடலிடங் காவலன் மதிமுதல்
வழுதியர் வரைபுக மற்றவர் தேவியர்
அழுதுய ரழுங்கலி னழுங்கிப் பொழுதியல்
வஞ்சியிற் காஞ்சி வகுத்துச் செஞ்சிலைக்
கலிங்கன்......யணைந்து நொதுமலர்
கங்க பாடி கவ்விக் கொங்கம்
வெளிப்படுத் தருளி யளிப்படுத் திருளிய
சாரன்மலை யீட்டுஞ் சேரன்மலை ஞாட்டுத்

---

(1044) வீரசோ. யாப். 33. மேற். (1045)யாப்.வி. 53. (1046)தனிப்பா.

தாவடிக் குவட்டின் பாவடிச் சுவட்டுத்
தொடர்நெய்க் கனகந் துகளெழ நெடுநற்
கோபுரங் கோவை குலைய மாபெரும்
புரிசை வட்டம் பொடிபடப் புரிசைச்
சுதைகவின் படைத்த சூளிகை மாளிகை
உதைகழ ஞள்ளெரி கொளுவி யுதகை
வேர்தைக் கடல்புக வெகுண்டு போந்து
சூழமண் டலந்தொழ வீழமண் டலமும்
கொண்டு தண்டுவிட் டருளிப் பண்டு
தங்க டிருக்குலத்தோர் தடவரை யெழுதிய
பொங்குபுலிப் போத்துப் புதுக்கத் துங்கத்
திக்கினிற் சேனை செலுத்தி மிக்க
ஒற்றைவெண் குடைக்கீ ழிரட்டைவெண் கவரி
தெற்றிய வனிலந் திவள வெற்றியுள்
வீற்றிருந் தருளிய வேந்தன் போற்றிருந்
தண்டமிழ் நாடன் சண்ட பராக்கிரமன்
திண்டிறற் கண்டன் செம்பியர் பெருமான்
செந்திரு மடந்தைமன் சீராச ராசன்
இந்திர சமான னிராசசர் வஞ்ஞனெனும்
புலியைப் பயந்த பொன்மான் கலியைக்
கரந்து கரவாக் காரிகை சுரந்த
முலைமகப் பிரிந்து முழங்கெரி நடுவணுந்
தலைமகற் பிரியாத் தையல் நிலைபெறுந்
தூண்டா விளக்கு.........தாரன்
திருப்புய முயங்குந் தேவி விருப்புடன்
வந்துதித் தருளிய மலையர்திருக் குலத்தோர்
அன்வ யாகத மாகத் தொன்மையிற்
குலதெய்வ மாகக் கொண்டது நலமிகுங்
கவசந் தொடுத்த கவின்கொள் கதிர்நுதித்
துவசந் தொடுத்த சுதைமதிற் சூழகம்

... ... ...

காளா கருவுங் கமழ்சந் தனமும்
தாளாந் திரளச் சரளமு நீளார்
குறிஞ்சியுங் கொகுடியு மகடியர் குன்றிற்
பறிந்துடன் வீழப் பாய்ந்து செறிந்துயர்

புதுமத கிடறிப் பொரக்கலிங் கிடந்து
மொதுமொது முத்திரை விலகிக் கதுமென
வன்கரை பொருது வருபுனற் பெண்ணைத்
தென்கரை யுள்ளது தீர்த்தத் துறையது
மொய்வைத் தியலு முத்தமிழ்க் கபிலன்
மூரிவண் டடக்கைப் பாரிதன் னடைக்கலப்
பெண்ணை மலையற் குதவிப் பெண்ணை
யலைபுன லழுவத் தந்தரிட் சஞ்செல
மினல்புகும் வீடுபே றெண்ணிக்
கனல்புகுங் கபிலக் கல்லது புனல்வளர்
பேரெட் டான வீரட் டானம்
அனைத்தினு மனாதி யாயது நினைப்பினும்
உணர்தற் கரியது யோகிக ளுள்ளது
புணர்தற் கினியது பொய்கைக் கரையது
சந்தன வனத்தது சண்பகக் கானது
நந்தன வனத்தி னடுவது பந்தற்
சுரும்படை வெண்பூங் கரும்பிடை துணிதர
ஆட்டொலி யாலை யயலது பாட்டொலி
... ... ... ...
பாடகச் சீறடிப் பணைமுலைப் பாவையர்
நாடகத் துழுதி நவின்றது சேடகச்
சண்டையுங் கண்டையுந் தாளமுங் காளமும்
கொண்டதிர் படகமுங் குளிறுமத் தளங்களும்
கரடிகைத் தொகுதியுங் கைம்மணிப் பகுதியும்
[திருப்பொ]லி திருப்பலி சிறந்து விருப்பொலிப்
பத்தர்தம் பாடல் பயின்றது முத்தமிழ்
நாவலர் நாற்கவி நவின்ற தேவலில்
அருடையொ டரகர வெனக்குனித் தடிமைசெய்
பருடையர் பகுவிதம் பயின்றது...முக்
கண்ணவ னுறைவது கடவுளர் நிறைவது
மண்ணவர் தொழுவது வானவர் மகிழ்வது
மற்றுமின்ன வளங்கொண்மதிற் பதாகை
தெற்றுங் கொழுநிழற் சிவபுரத் தாற்குப்
பன்னு ணிலைபெற முன்னு ளரவோன்
செய்த தானந் தேவன் குடியில்
... ... ... ...

இதன்ற ளிவந்த வியல்வகை யுரைப்பில்
ஒப்புத்திரு வனையவர் முப்பத் திருவர்
பாடல் பயின்ற நாடகங் களிற்கும்
நெஞ்சா சார நிறைவொடு குறையாப்
பஞ்சா சாரியப் பகுதி யோர்க்கும்
நறைப்புது மலர்விரி நந்த வானம்
இறைப்புத்தொழில் புரிந்த விருந்தவத் தோர்க்கும்
... .. .. ...
அறங்கள் யாவையு மிறங்கா வண்ணம்
விஞ்ஞா பனத்தால் மிகவெளிப் படுத்தோன்
அன்பது வேலியி னடைகுநர்க் காக்கும்
ஒன்பது வேலி யுடைய வுரவோன்
கொம்பர் நாடுங் குலாமலர்ச் சோலை
அம்பர் நாட னலங் குடிக்கோன்
போராண் டலைமை புணர்புயத் துரவோன்
கூடத்தொழில் கேளா தேத்தொழின் முனைந்த
கண்டகர் கரிசறத் துரிசற் கலிசெக
மண்டல சுகதியில் வயப்புலி வளர்த்தோன்
வான்பால் மதியும் வலம்புரி யிடம்புரி
மான்பா......மவிர்சடைக் கடவுள்
நெற்றிக் கண்ணு நிலத்தவர் நினைந்த
தெற்றிக் கண்ணுஞ் சிந்தா மணியும்
போலப் பிறந்த புகழோன் கோலக்
கருங்களிற் றுழவன் கம்பத் தடிகள்
மாதி விடங்கு வரிபரி வல்ல
வீதி விடங்கன் மென்கருப் பாலைத்
தலந்தரு தண்டலைத் தடநீர்
நலந்தரு பொன்னி நாடுகிழ வோனே.

1048. வேலியர்கோன் வீதி விடங்கன் விறற்கம்பன்
ஆலியன்மான் சோழ னதிசாரி—கோலப்
படியின்மேற் பொற்பூப்பைங் கோவல்வீ ரட்டர்
முடியின்மேல் வைத்தான் முயன்று.

1049. பொன்முக் கழஞ்சால் மணிப்பட்டம் பூப்புனைந்து
மின்மிக்க கட்டமைந்த மேற்கட்டி—சொன்மிக்க
கோவலான் வீரட்டற் கீந்தான் குலவேலி
காவலான் வாழ்கம்பன் கண்டு.

---

(1047—49) திருக்கோவற்சாஸனப்பகுதி; செந்தமிழ், தொ. 4, பக்—282—35.

### விசயவாடை—உதயாதித்தன்.

1050. வேங்கை வளநாடன் விசயவா டைக்கதிபன்
ஓங்கு புகழுதயா தித்தனுக்குத்—தாங்குகடல்
நேராமென் றூலு நிறுத்தா லவன்செய்யன்
காரார் நிறமக் கடல்.

### மங்கலக்கால்-ஐயநம்பி.

1051. தெண்டிரைநீர்த் தென்குமரி மாநகர்த்தண் ணீர்ப்பந்தல்
எண்டிசையு மேத்த வினிதமைத்தான்—வண்டிமிரும்
அந்தெரிய லானைய நம்பி யடல்வளவன்
மந்திரிதென் மங்கலக்கால் மன்.

1052. மானமிக்க வேலையன் மங்கலக்கால் மன்குமரி
தானமைத்த பந்தலிற்றண் ணீரட்டத்—தேனிரைத்த
மைத்தங்கு சோலை மணற்குடியி லேவைத்தான்
நித்தம் பதினுழி நெல்.

### நக்கன்.

1053. கருப்பூர்மன் கம்பனுக்குக் காதலன்சீர் நக்கர்
விருப்பூர் விழுமிய தேவர்க்குத்—திருப்பூர்
விளக்குவைத்துத் தொண்ணூறு டாங்களித்தான் மெய்யே
உளக்கருத்தாற் சால வுவந்து.

### சேரன் மகள்.

1054. சேரன் மகளார் சிறந்த [1]வெழின்மானைத்
தாரன் திரையன் தகுவிருப்பாற்—றேரிற்
கொணர்ந்தானை.................குட்டுவெனுற்...
புணர்ந்தானைப் போற்று முலகு.

### சோழகுலவல்லி.

1055. ஓதுஞ் சகரர்யாண் டோரொருபத் தெட்டின்மேல்
ஆதிமூ லந்நாளி லானிதனிற்—சோதி
துளங்கில மேற்சோழன் சோழகுல வல்லி
களங்கமற வைத்தாள் கரு.

1056. வண்ணார் திகழுங் கொடிமாட மன்னுஞ் சோழ குலவல்லி
நண்ணுந் தலைமை யுடையாரை நாமார் புகழப் பாமாலை
எண்ணும் படியிற் புகழாள ரென்றே யன்றே யென்னுடைய
கண்ணும் பழனக் கழுமலமுங் கலந்தார் திருவ மலர்ந்தாரேல்.

---

(1050) வீரசோ. அலங். 23. மேற். (1051-52) T. A. S. 169-70. (1053) S. I. I, IV, No. 545. p. 182. (1054) சாஸனம். [1]வெழின்மானை. (1055-6) S. I. I, IV, No. 621.